விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 24 | செவ்வாய்க்கிழமை | (09.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 326

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் சிறந்து

முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு வாழைச்சேனையில் இராணுவ வாகனம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

### பொதுமகன் ஒருவர் படுகாயம்; வாகனம் சேதம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசமான வாழைச் சேனை பேத்தாழை இறங்குதுறைக்கு அண்மையில் வாழைச் சேனை 23-2 படைப்பிரிவின் கட்டளை அதிகாரி எம்.எஸ். குணரத்தினாவின் வாகனம் மீது நேற்று நண்பகல் கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச் சம்பவத்தில் வாகனம் சிறு சேதத்திற்கு உள்ளானதுடன் வயோதிபர் ஒருவரும் படுகாயமடைந்தார்.**

இராணுவ வாகனம் ஒன்று வாழைச்சேனைப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேதினம் சம்பவம் இடம்பெற்றவேளை இராணுவ அதிகாரி அதனுள் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிக் குண்டு வாகனக் கண்ணாடியில்பட்டு கண்ணாடி சேதமடைந்தது. அத்துடன் கைக்குண்டு வாழைச்சேனை சந்தையில் உள்ள கடை ஒன்றிற்கு முன்னால் விழுந்து வெடித்தது. இதன்போது எம். அகம்மது லெப்பை (வயது 65) என்ற வயோதிபர் படுகாயமடைந்தார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட இருவர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாக இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வாழைச்சேனை சந்தைப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்புடன் தினமுரசுப் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்தவர்கள்மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டியுள்ளது.


இச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. கட்சியும் இராணுவத் தரப்பும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறையிட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இச் சம்பவம் யாரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டது என தம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை என வாழைச் சேனைப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயத்திலக தெரிவித்தார். (ச)

## நோர்வே தூதுவர் சொல்ஹெய்ம் நேற்றிரவு கொழும்பு வந்தார்

### இன்று ஹக்கீமுடன் பேச்சு

(கொழும்பு)



நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவு இலங்கை வந்தடைந்தார். நோர்வே வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவரும் எரிக் சொல்ஹெய்முடன் வந்ததாக கொழும்பு நோர்வேத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ்டி தெரிவித்தார்.

இலங்கை வந்த எரிக் சொல்ஹெய்ம் இன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளார்.

சமாதானப் பேச்சின் இறுதித் திட்டம் குறித்து தேசிய தலைவர் வே. பிரபாகரனுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் சந்திக்கவுள்ள நிலையில், எரிக் சொல்ஹெய்ம் இன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பின் போது முஸ்லிம் காங்கிரஸின் தனித்தரப்புக் கொள்கை குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. (ச-121)

## கடற்படையினர் பாவனைக்கென அவுஸ்ரேலியாவிலிருந்து கப்பல்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து வடபகுதி துறைமுகங்கள் மற்றும் ஏனைய கடற்படைத் தளங்களுக்கு கடற்படையினரை காவிச் செல்லும் நடவடிக்கைகளுக்காக புதிய கப்பல் ஒன்றினை கொள்வனவு செய்ய கடற்படைத் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவுஸ்ரேலியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள இக் கப்பலை பார்வையிடுவதற்காக கடற்படையின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று இவ்வாரம் அவுஸ்ரேலியாவுக்கு பயணமாகவுள்ளது.

தற்போதைய நிலையில் வாடகைக் கப்பல் ஒன்றின் மூலம் கடற்படையினர் வடபகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன்போது பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதுடன் அதிக செலவீனங்களும் ஏற்படுகின்றன.

இதேவேளை வடபகுதிக்கு தற்போது படையினரை காவிச் செல்லும் கப்பல் பல்வேறு சேதங்களுடனேயே கடற் பயணங்களை மேற்கொண்டு வருகின்றது. இதனால் கப்பலில் பயணம் செய்வது ஆபத்து என்பதனைக் கருத்தில் கொண்டு புதிய கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என கடற்படை தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-121)

## இராணுவ வாகனம் மீதான தாக்குதல் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பில்லை

### மட்டு - அம்பாறை அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பேத்தாழை இறங்குதுறைக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை 11 மணியளவில் கல்குடா இராணுவ முகாம் தளபதியின் வாகனத்திற்கு கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமோ தொடர்போ இல்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் இலங்கை படைத்தரப்பின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான தாக்குதல்களை இராணுவத்தின் மீது நடத்துவதனால் எமது சமாதான சூழலை பாதிப்படைய வைக்கலாம் என தேசவிரோதக் கும்பல்கள் கருதுகின்றன. இதனால் இப் பிரதேசத்தில் போர்ச் சூழலை ஆரம்பித்து போரை மீண்டும் தொடங்குவதற்கு கங்கணம் கீட்டி வருவதுபோல் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் சமாதான ஒப்பந்தத்தை கண்ணியமாக பேணி கடைப்பிடித்து வருகின்றனர். அத்துடன் இச் சமாதானச் சூழலை பாதிப்படையா வண்ணம் இருப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இத் தாக்குதல் சம்பவத்தை விடுதலைப் புலிகள் வன்மையாக கண்டிப்பதோடு இவற்றை இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவிற்கான தனது ஐந்து நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து புறப்பட்ட ஜனாதிபதி புத்தஹாயாவில் உலக இளம் பௌத்த குருமார் அமைப்பின் கருத்தரங்கு ஒன்றில் பங்குபங்றினார்.

அந்தக் கருத்தரங்கை முடித்துக்கொண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குச் சென்று அண்மையில் மறைந்த அந் நாட்டு ஜனாதிபதி ஷேக் செயக்வின் சுல்த்தான் அல்லினின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது உறவினர்களை நேரில் சந்தித்து தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் தவறிவிழுந்தவரை அலை அடித்துச் சென்றது

### வல்வெட்டித்துறைக் கடலில் சம்பவம்

(கரவெட்டி)

கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் தவறி கடலுக்குள் வீழ்ந்ததினால் அவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிக் கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தினையடுத்து இவருடன் சென்ற மற்றைய மீனவரால் உடனடியாக கரையில நின்றவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பெருமளவான வள்ளங்கள், றோலர்கள் சகிதம் சென்று தேடுதல் நடத்தியபோதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காணாமல்போனவர் அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எஸ். கருணாகரன் (வயது 43) என்பவராவார்.

இதேவேளை காணாமல்போனவரை தேடும் பணிகள் இன்றும் தொடர்ந்து நடைபெறும் என வடமராட்சி மீனவ சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது. (ச-105)

## மன்னார் மீனவர் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(மன்னார்)

மன்னார் மீனவர்களால் மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இந்திய இழுவைப் படகுகள் மன்னார் மற்றும் வடபகுதி பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வந்தது.

இரண்டு வாரங்களுக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக வன்னிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பரமிகுலதுங்க நேற்று மாலை உறுதியளித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது அவர் உறுதியளித்ததையடுத்து இப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இப் பிரச்சினை தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு ஒன்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தாழமுக்கம் குறைவடையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலும் அதனை அண்டிய கடற்பரப்புக்களிலும் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் தற்பொழுது படிப்படியாக நகரத் தொடங்கியிருப்பதாக வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களத்தின் யாழ். மாவட்டத்தின் பொறுப்பதிகாரி வ. புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

எனினும் பருவமழை தொடர்ந்து பெய்யும் என அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டிலும் 1230 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருப்பினும் இவ்வாண்டில் நேற்றுக் மாலை 4 மணிவரைக்கும் 1093.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அவர் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் சென்றவரை மின்சாரம் தாக்கியதில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதியில் அறுந்து கிடந்த மின்சார வயரில், சைக்கிள் ஏறியபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உரும்பிராயைச் சேர்ந்த பா. கஜீந்திரன் (வயது 14) என்ற மாணவனே காயமடைந்தவர் ஆவார். (ச-05)

## இன்று ஒரு தகவல்

# நட்பும் பகையும்

ஒரு பக்தன் காட்டில் மிகவும் கடுமையாக தவம் புரிந்து கொண்டிருந்தான். கடவுள் உடனே அவனுக்கு முன்பாக வந்து காட்சி கொடுத்தார். கையில் கதாயுதம் வேறு வைத்திருந்தார். "பக்தா! உன்னுடைய பக்தியை மெச்சினேன்! உனக்கு என்ன வேண்டுமோ கேள் தருகிறேன்!" என்றார். இப்படிச் சொன்ன பின்பு பக்தன் சும்மா இருப்பானா? பகவானே என்னுடைய முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள சக்திகளை உன்னுடைய கதாயுதத்தினால் தாக்கி வீழ்த்தி அழித்து விட வேண்டும். இது தான் என்னுடைய வேண்டுகோள்" என்றான்.

பகவான் இதைக் கேட்டார். முகத்தில் புன்னகை 'அதற்கென்ன? அப்படியே செய்து விடுகிறேன் என்று கூறிவிட்டு மறைந்து விட்டார். கொஞ்ச நேரம் கழிந்தது. ஆண்டவன் கையில் இருந்த கதாயுதம் வேகமாக வந்தது. வரம் கேட்டானே பக்தன். அவனது மார்பை நோக்கி வந்து தாக்க ஆரம்பித்து விட்டது. அப்படியே தடுமாறிக் கீழே விழுந்து விட்டான். இது என்ன வரம் கேட்டது வம்பாகி விட்டதே!" என்று நினைக்க ஆரம்பித்துவிட்டான்.

"ஐயையோ ஆண்டவனே என்ன இது? என்னுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் பகவானை அல்லவா தாக்கச் சொன்னேன். நீ ஞாபக மறதியாக ஏதாவது செய்து விட்டாயா? உனது கதாயுதம் என்னையே வந்து தாக்குகிறதே! குறிதவறி விட்டதா?" என்று கத்த ஆரம்பித்து விட்டான் பக்தன்.

கடவுள் மறுபடியும் காட்சி கொடுத்தார். பக்தனைப் பார்த்துச் சொன்னார். "பக்தா! நீ கேட்ட படி தான் நான் ஆயுதத்தை வீசினேன். ஞாபக மறதியெல்லாம் ஒன்றும் கிடையாது. குறிதவறியும் வரவில்லை சரியாகத்தான் வந்திருக்கிறது. மற்றவர்களைத் தாக்கவேண்டும்,வீழ்த்தவேண்டும், அழிக்கவேண்டும் என்று நினைக்கும் உனது மனம் தான் உனக்குப் பகைவன், எதிரி எல்லாம். உனது முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது நீயே தான் அதனால்தான் இது உன்னையே வந்து தாக்கியிருக்கிறது" என்று கடவுள் சொன்னாராம்.

இதிலிருந்து நமக்கு எதிரி யார் என்பதை நன்கு புரிந்து கொண்டோம் அல்லவா?

நமக்கு நண்பர்கள் யார் நமக்குக் கிடைக்கும் நண்பர்களை மூன்று வகையாகப் பிரித்து விடலாம். பனைமரம்,தென்னைமரம், பாக்குமரம் என்று. பனைமரம் இருக்கிறதே இது தானாக முளைக்கும், தானாகவே வளரும். நமக்கு பலன் கொடுக்கும். நமக்கு வலிய வந்து உதவி செய்யும் நண்பர்கள் இந்தரகம்.

தெனனைமரம் இருக்கிறதே இதற்கு எப்போதாவது தண்ணீர் விட்டால் போதும்... வளர்ந்து விடும். இதுமாதிரி எப்போதாவது உதவி செய்தால் அதை நினைவில் வைத்திருந்து நமக்கு உதவி செய்யும் நண்பர்கள் தென்னை மரம் மாதிரி. பாக்கு மரம் இருக்கிறதே இதற்கு தினமும் நீர்விட்டால் தான் வளரும். பலன்தரும் இதுபோல தினமும் உதவி செய்தால் தான் நம்மைக் கவனிக்கும் நண்பர்கள் உள்ளனர்.

ஆக நண்பர்களை இந்த வகையில் அடையாளம் கண்டுகொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் காலத்தினுடைய கோலம் எப்படிப்பட்டதென்றால் நாம் நல்லதென்று நினைத்து இன்னொருவருக்கு உதவி செய்தால் கூட உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒருவர் வந்தார்... "சார்! ஆற்றுவெள்ளத்தில் நான் தத்தளித்துக் கொண்டிருந்தபோது என்னைக் காப்பாற்றியது நீங்கள் தானா சார்? " என்று கேடடார். அதற்கு இவர் "ஆமாம்! அதனால் என்ன சார்? அது எனது கடமை இதற்குப் போய் நன்றியெல்லாம் கூற வேண்டிய அவசியமில்லை" என்றார்.

இதற்கு அந்த ஆள்"அதற்கில்லை சார்! எனது சட்டைப் பையில் 25 ரூபா பணம் வைத்திருந்தேன் அதைக் காணவில்லை. அதற்காகத் தான் கேட்டேன்" என்றாராம். இது எப்படி?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சட்டவிரோத ஆயுதங்களைக் கட்டுப்படுத்த தேசிய ஆணைக்குழுவொன்று அமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இலங்கையிலுள்ள சட்டவிரோத சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக தேசிய ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைத்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களின் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடை செய்வது மற்றும் இவற்றைக் கட்டுப்படுத்தி படிப்படியாக முற்றாக ஒழிப்பது என்பவற்றிற்கு ஆகக் கூடுதலாக ஒத்துழைப்பு இவ் ஆணைக் குழுவிடம் இருந்து பெறப்படவுள்ளது.

அத்துடன், இந்த ஆணைக்குழு தொடர்பில் ஆகக் கூடுதலான ஒத்துழைப்பைப் பெறும் நோக்கத்துடன் பொது மக்களிடையே விழிப்புணர்வுத் திட்டமொன்றை அமுல் செய்வதற்கு வழிவகுக்கும் முக்கிய பொறுப்பும் இவ் ஆணைக் குழுவையே சாரும்.

தற்போதுள்ள நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து தேவை ஏற்படின் அவற்றில் திருத்தங்களைப் பிரயோகிக்கும் வகையிலான அதிகாரத்தை இவ் ஆணைக்குழு கொண்டிருக்கும்.

இது தொடர்பில் தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்குவதற்கான திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான திட்டமொன்றையும் ஜனாதிபதி ஆணைக் குழு தயாரிக்கும்.

சட்டவிரோதமாக ஆயுங்கள் விநியோகிக்கப்படும் இடங்களை இனங்கண்டு இந்த ஆயுதக் கடத்தல்களைத் தடுப்பதற்கான யோசகைளை வழங்கும் கடமையும் இவ் ஆணைககுழுவையே சாரும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஆணைக் குழு முயற்சி செய்ய வேண்டும்.

அத்துடன், திட்ட அமுலாக்கல் நடவடிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள், முன்னேற்றம் என்பனபற்றியும் தமக்கு அவ்வப் போது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என இவ் ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ற-121)

# சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதி கலந்துகொள்வார்?

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது அதில் கலந்துகொள்ளும் அரச பிரதிநிதிகள் குழுவில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரும் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான சபையின் அரசியல் குழுவின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத் தகவலை வெளியிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற மாற்றுக்குழுவின் உறுப்பினரான என்.எச். சாஹிர் இக் கூட்டத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றின் போதே ஜனாதிபதி இதுவிடயம் குறித்து தெரிவித்தார்.

எனினும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது பிறிதொரு முஸ்லிம் குழுவொன்று கலந்துகொள்வது தொடர்பாக ஜனாதிபதி இக் கூட்டத்தில் கருத்து எதனையும் வெளியிடவில்லை. (ற-121)

## இராசி பலன்

**09.11.2004** (ஐப்பசி 24, செவ்வாய்க்கிழமை)

துவாதசி நள்ளிரவு12.04 மணிவரை

உத்தரம் முற்பகல் 10.21 மணிவரை

இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

சுபநேரம் 10.35- 12.05 மணிவரை

கௌரி விரதம் 18ஆம் நாள்

அமிர்த சித்தம்.

- **மேடம்** நண்பர்கள் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, தேக நலன்.
- **இடபம்** ஆரோக்கிய குறைவு, தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், பணக்குறைவு.
- **மிதுனம்** தன்னம்பிக்கை குறைவு, கல்வியில் ஆர்வம், தனவிரயம், முயற்சி தாமதம்.
- **கடகம்** பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, புதிய பொருள் சேர்க்கை.
- **சிங்கம்** மனோ சங்கடம், அதிக செலவு, எடுத்த காரியம் தாமதமாகும், வீண்பகை.
- **கன்னி** சுப நிகழ்வு, சயன சுகம், மாதர் நட்பு, வெகுமானம்.
- **துலாம்** பிறருக்கு உதவி செய்தல், தனவிரயம், பிரயாணம், கோபப்படுதல்.
- **விருச்சிகம்** குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, தொழில் நன்மை.
- **தனுசு** நல்ல சம்பவம், பொருள் சேர்க்கை, காரிய சித்தி, பெருமையடைதல்.
- **மகரம்** குடும்பக் கவலை, அதிக செலவு, வயிற்றுக் கோளாறு, சரீரப் பிரயாசை.
- **கும்பம்** பொருள் விரயம், மனக் கவலை, சரீர வியாதி, காரிய தாமதம்.
- **மீனம்** தேக நலன், மாதர் நட்பு, காரிய நன்மை, நல்ல வருமானம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# இலங்கையில் இஸ்லாமிய கடும் போக்குவாதிகளா?

***மறுக்கிறார்கள் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள்***

(கொழும்பு)

இலங்கையில் இஸ்லாமிய கடும் போக்குவாதிகள் உள்ளதாக வெளியான பத்திரிகை செய்திகளை முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள் நிராகரித்துள்ளார்கள்.

கிழக்கில் அத்தகைய தீயசக்திகள் இல்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் இரு குழுக்களுக்கிடையிலான மோதல்கள் என அவர் கூறினார்.

கருணாகுழு ஆயுதங்களை ஏந்தி இருப்பதாக கூறப்படுவதையும் அவர் நிராகரித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கிம் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ஊடகங்களில் வெளியான இத்தகைய செய்திகள் கிழக்கு முஸ்லிம்களின் உண்மையான தோற்றப்பாட்டின் மீது படிந்த கறையாகும் எனக் கூறினார். (க-10)

# விவாதச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மாவீரர் நாளை முன்னிட்டு திறந்த முறையில் விவாதச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விவாதக் குழுக்கள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேரடியாகத் தமது விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் ஓர் அணியில் மூவர் வாதிட அனுமதிக்கப்படுவர். தமிழீழப் போராட்ட வரலாற்றை மையமாக வைத்து இதற்கான தலைப்புக்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பெற்றுக் கொள்ள முடியும். (ற)

# பகிஷ்கரிப்பை விஸ்தரிக்க தொழிற்சங்கம் முஸ்தீபு

(கொழும்பு)

கேகாலை பிராந்திய மின் அத்தியட்சகர் மீது தாக்குதல் நடத்தியவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் தற்போது நடைமுறையில் உள்ள வேலை பகிஷ்கரிப்பை நாடு முழுவதிலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை மின்சாரசபையின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.

கடந்த 3ஆம் திகதி கேகாலை அத்தியட்சகர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கேகாலை மாவட்டத்தில் மின்சார தொழிற்சங்க கூடடமைப்பு வேலை பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றமை தெரிந்ததே.

அதிகாரிகள் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை கைது செய்வதற்கு பின் நிற்கின்றனர். இதனால் நிலைமைகள் மேலும் மோசமடையும் என்பதில் அவர்கள் அக்கறையின்றி இருப்பதாக மின்சாரசபையின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (க-8)

# குடாநாட்டு கலைஞர்களின் நாடகங்கள் தேசிய நாடகவிழாவில் அரங்கேற்றப்படும்

## யாழ். வந்த தேசிய நாடகசபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

இலங்கை கலாசார அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய நாடக சபையின் உறுப்பினர்களான எம்.எம்.ரவ்வ் (கலைச்செல்வன்),



ஆ.தங்கவேலாயுதம் மற்றும் பொன் கணேசமூர்த்தி ஆகியோர் நேற்று முன் தினம யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தனர். இவர்கள் வடபகுதியில் உள்ள கலைஞர்களைச சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அவர்களுடைய ஆக்கங்களையும் கொழும்புக்கு எடுத்துச் செல்லவுள்ளனர்.

இவ்வாண்டு ஜனவரிமாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வடபகுதியில் உருவாக்கப்பட்ட நாடகங்களில் சிறப்பான கருத்துள்ள நாடகங்களை கொழும்பில் நடைபெறவுள்ள 2005 ஆம் ஆண்டிற்கான தேசிய நாடகவிழாவில் அரங் கேற்றும் நோக்குட னேயே இக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதியில் வடபகுதியில் தயாரிக்கப்பட்ட எந்தவொரு நாடகமும் தேசிய நாடக விழாவில் பங்கேற்பதற்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப் போர் தமது விண்ணபங்களை 'செயலாளர், தேசிய நாடகக் குழு, இலங்கைக் கலைக்கழகம், ஆனந்தக் குமார சுவாமி மாவத்தை, கொழும்பு - 07 ' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

நடைபெறவுள்ள தேசிய நாடக விழாவில் 4 தமிழ் நாடகங்களே அரங்கேற்ற முடியும் எனினும் வட பகுதயில் இருந்து இதற்காகப் பல கலைஞர்கள் விண்ணப்பித்தால் கொழும்பு தேசிய விழா நடைபெறுவதற்கு முதல் யாழ்ப்பாணத்தில் நாடக விழாவொன்றை நடத்தி அதில் திறமையான நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு விழாவில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படும். கலைஞர்கள் கொழும்பு தேசிய நாடக விழாவில் பங்கேற்பதற்கு வடபகுதி நாடகங்கள் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான செலவுகள் அனைத்தையும் தேசிய நாடக சபையே ஏற்றுக்கொள்ளும் அத்துடன், அந்நாடகக் கலைஞர்களுக்குப் பரிசில் களும் வழங்கப்படவுள்ளன.

தமிழ்க் கலைஞர்களுக்கு உதவிகள் செய்வதற்கு தேசிய நாடக சபையில் உள்ள தமிழ்க் கலைஞர்கள் தயாராகவே உள்ளனர் என்றும் தமிழ்க் கலைஞர்கள் தம்முடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் எனவும் இங்கு வருகை தந்த கலைஞர்கள் தெரிவித்தனர்.

யாழ்.விஜயத்தை முடித்துக் கொண்ட இவர்கள் கிழக்கில் உள்ள தமிழ்க் கலைஞர்களையும் சந்திக்கவுள்ளனர். (ற-19)

# மின் கட்டணத்தை சலுகை அடிப்படையில் பெற்றுத் தருக!

## மாவை எம்.பியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களுக்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைந்த கட்டண விகிதத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிறீன் பீல்ட் சனசமூக நிலையம் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சனசமூக நிலையங்களுக்கான மின் கட்டணம், தற்போது பொதுவான பாவனையாகக் கருதி, கூடிய விகிதத்தில் அறவிடப்படுகின்றது. இவ் உயர்ந்த கட்டணத்தை, அங்கத்தினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் சந்தாப் பணத்திலிருந்து கட்டமுடியாமல் இருக்கின்றது.

எனவே, தயவு செய்து இக் கட்டணத்தை வழிபாட்டு ஸ்தலங்களுக்கென அறவிடும் சலுகை அடிப்படையிலான கட்டண விகிதத்தில் அறவிட ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

# தனிநாட்டுக் கோரிக்கையை புலிகள் இன்று கைவிட்டுள்ளனர்

## மனோ கணேசன்

(கொழும்பு)

தனிநாட்டுக்கான கொள்கையுடன் இருந்த விடுதலைப்புலிகள், இன்று அதனை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் இடைக் காலத் தன்னாட்சி அடிப்படையில் தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளதாக மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண மக்கள் முன்னணியினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியல் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகளினால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனையானது, இதனை ஏற்றுக்கொண்டு, இடைக் கால நிர்வாக ஆட்சி முறையைத் தமக்குத் தரவேண்டுமென்று வலியுறுத்துவதாக அர்த்தப்படாது.

மாறாக, இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்துக் கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்றே கூறியுள்ளார் எனத் தெரிவித்தார். (ற-8)

# கண்டியில் தீ விபத்து 7 பெண்கள் காயம்

(கண்டி)

கண்டியில் வீடு ஒன்று தீப் பற்றி எரிந்ததில் அவ் வீட்டில் இருந்த ஏழு பெண்கள் எரிகாயங்களிற்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டள்ளனர்.

இவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவ மனை வட்டாரங்கள் கூறுகின்றன. கண்டி மகியாங்கனைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கண்டிப் பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தீ விபத்தால் வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் முற்றாக எரிந்து சம்பலாகியுள்ளன. குப்பி விளக்கு சரிந்து விழுந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. (க-10)





யாழ்.மத்திய கல்லூரி தமிழ் மன்றத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட திருக்குறள் கருத்தரங்கில் கலாநிதி த.சிங்கன் உரையாற்றுவதையும், இதில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காண்க.

(படங்கள் :- ஞா.ஐங்கரன்)

# வன்னித் தேர்தல் தொகுதியில் விரைவில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துக!

## அடைக்கலநாதன் எம்.பி.சமுர்த்தி அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னி தேர்தல் தொகுதியில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமுர்ததி, வறுமை ஒழிப்பு அமைச்சர் திருமதி பவித்திராதேவி வன்னி ஆராய்ச்சிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

வன்னி தேர்தல் தொகுதியில், வவுனியா, மன்னார், முல்லைத் தீவு மாவட்டங்கள், அடங்குகின்றன. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த இப் பகுதி குடும்பங்கள், வறுமை நிவாரண உணவு முத்திரைகளைப் பெற்றதன் மூலம் ஓர் அளவு சீரான வாழ்வை நடாத்திவந்தன.

1997 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து, சமுர்த்தித்திட்டத்தை வன்னித் தேர்தல் தொகுதியிலும் நடை முறைக்கு கொண்டுவர வேண்டுமென்ற நோக்கில், வறிய குடும்பங்கள் பெற்றுவந்த வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டம் இரத்துசெய்யப்பட்டது.

ஆனால், வவுனியா மாவட்டத்தின் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளில் மாத்திரம் சமுர்த்தித்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வவுனியா மாவட்டத்தின் மற்றைய பகுதிகளுடன் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் முழுவதிலும் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப் படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது மிகவும் கவலைக்குரிய ஓர் விடயமாகும்.

வறுமை நிவாரண உணவு முதத்திரைகளைப் பெற்று ஆறுதலடைந்துவந்த வறிய குடும்பங்கள், அத் திட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு எதிர்பார்த்திருந்த சமுர்த்தித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படாததினால் பெரும் கஷ்டத்தையும் துன்பத்தையும் அடைந்து வருகின்றன என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவரவிரும்புகின்றேன்.

வன்னித் தேர்தல் தொகுதியைச சேர்ந்த வறிய குடும்பகங்கள், மற்றைய மாவட்ட மக்களைப் போன்று சமுர்ததித் திட்டத்தின் மூலம் பயன பெறவேண்டும். நன்மையடைய வேண்டும் என்று பல தடவைகளில் கடிதங்கள் வரைந்துள்ளேன் நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்துள்ளேன். ஆனால், இன்று வரை இது சம்பந்தமான எவ்வித நடவடிக்கையும், வன்னித் தேர்தல் தொகுதியின் மூன்று மாவட்டங்களிலும் எடுக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஓர் முறை, மன்னார் உதவி அரசாங்க அதிபரினால் சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கான நேர் முகத்தேர்வு நடாத்தப்பட்டது. அதன் பிற்பாடு தள்ளாடிப் படைமுகாமிலும் இணைப்பதிகாரியினால் ஓர் நேர்முகப்பரீட்சை இதே பதவிக்கு நடாத்தப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் ஓர் சில மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் கூட இதே பதவிக்கு இளைஞர்களின் பட்டியலைத் தயாரித்தது மிகவும் கவலைக்குரியதும் நகைப்புக்குரியதுமான விடயமாகும்.

இது மாத்திரமல்லாது, ஒரு சில அரசியல்வாதிகளாலும் மேற்படி பதவிக்கான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இப் படிப் பல நடைமுறைகள் நடந்தேறியும் கூட எமது மாவட்ட இளைஞர்கள், இங்கும் அங்கும் அலைக்கழிக்கப்பட்டார்களே தவிர, உருப்படியான எவ்விடய மும் வருடங்கள் பல சென்றும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் பல மாவட்டங்களிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் சமுர்த்தித் திட்டத்தின் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருக்க, மன்னார் முல்லைத்தீவு, வவுனியாவின் ஓர் பகுதி வாழ் மக்கள் மாத்திரம், இதற்கு அருகதை அற்றவர்கள் என்ற ரீதியில் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் செயற்பட்டு, மாற்றான் தாய் மனப்பான்மையுடன் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றன என்ற ஆழ்ந்த கருத்து மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இது கவலைக்குரிய ஓர் விடயமாகும்.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் பிர தேசங்களிலும், இத் தட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு ஆவனசெய்யவேண்டும். மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குத் தேவையான சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பி.செ.பிரிவுகள் தொகை | கி.சே.பிரிவுகள் தொகை | தேவையான அதிகாரிகள் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| வவுனியா | 04 | 102 | 102 | தேவையான அதிகாரிகளின் முழுத் தொகை 209 தற்போது நிரப்பப பட்டிருப்பது 107. நிரபப்ப வேணடியது102 |
| மன்னார் | 05 | 153 | 173 | ஒவ்வொரு கி.சே. பிரிவிறகு ஒரு (1) அதிகாரியும், பி.செ.பிரிவு ஒவ்வொன்றிற்கும் நான்கு (4) அதிகாரிகளும். |
| முல்லைத் தீவு | 05 | 127 | 147 | ஒவ்வொரு கி.சே. பிரிவிற்கு ஒரு (1) அதிகாரியும், பி.செ. பிரிவு ஒவ்வொன்றிற்கும் நான்கு (4) அதிகாரிகளும். |

நியமனத்திற்கான விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மூலம் கோரப்படுவதே முறையானதும் நீதியானதுமான செயற்பாடாகும்.

மேற்படி நியமனங்கள் சம்பந்தமாகத் துரித நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## 2005ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல். (பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 19.11.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 14.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 18.11.2004ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர் தமது அடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும்.

தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்துகொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்றபின்னர் உரிய முறைப்படி நிரப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னராக சபைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்கைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:-


1. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கருவாட்டுக்கடை, கோழிக்கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் மூன்று மாத வாடகையுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரியும் செலுத்தப்பட வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறு மதியின் 3% ற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2.00 ற்கும், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 3.00ற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகைக்குப் புறம்பாக, அத்தொகையின் 15% வற் வரியாக செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரத் தொகையுடன் அதற்குரிய 15%வற்வரி செலுத்தப்படல் வேண்டும்.
6. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடம் இருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

அட்டவணை

| இல. | சந்தைகள் இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள். | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம். | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்ததொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 1000.00 | 10000.00 | 2950000.00 | - |
| 02 | உடுவில் கீளிச்சந்தை | 500.00 | 2000.00 | 70000.00 | - |
| 03 | உடுவில் ஆலடிச்சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 750.00 | 5000.00 | 660000.00 | 100.00 |
| 05 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 130000.00 | 100.00 |
| 06 | கருவாட்டுக்கடை இல. 03 | 300.00 | 2000.00 | 16000.00 | 60.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல. 04 | 300.00 | 2000.00 | 13000.00 | 60.00 |
| 08 | கருவாட்டுக்கடை இல. 05 | 300.00 | 2000.00 | 13000.00 | 60.00 |
| 09 | கோழிக்கடை இல. 06 | 300.00 | 2000.00 | 6500.00 | 60.00 |
| 10 | கோழிக்கடை இல. 07 | 300.00 | 2000.00 | 6500.00 | 60.00 |
| 11 | கோழி உரித்தல் | 300.00 | 1000.00 | 5000.00 | 60.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 1000.00 | 10000.00 | 2700000.00 | - |
| 02 | இணுவில் பொதுச்சந்தை | 300.00 | 2000.00 | 32000.00 | - |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 86000.00 | - |
| 04 | தாவடி ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 3000.00 | 41000.00 | - |
| 05 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 2000.00 | 22000.00 | 100.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 63000.00 | - |
| 02 | ஏழாலைச் சந்தை | 300.00 | 2000.00 | 13000.00 | - |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
05.11.2004.

திருமதி.ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.



அமெரிக்காவின் கிளன்டேல் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எப்., ஜூனியர் வெல்டர்வெயிட் சம்பயன்ஷிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் கோஸ்டியா சுயோ (வலது), தகோமா பார்கின் சர்ம்பா மிட்ச்செட்ல் ஆகியோர் ஆக்ரோஷமாக மோதினர். இதில் கோஸ்டியா சுயோ வெற்றி பெற்றார்.

# விளையாட்டு செய்திகள்

## தமிழக வீரர் முரளிக்கு பணப் பரிசும் பதவி உயர்வும்

தமிழகத்தின் இளம் சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக்கிற்கு பதவி உயர்வையும், 1 இலட்சம் ரூபா பணப்பரிசையும் அறிவித்திருக்கிறார் மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ்.



மும்பையில் நடைபெற்ற அவுஸதிரேலியாவுக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் 7 விக்கெற்றுக்களை வீழ்த்தியதன் மூலம் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமானார் முரளி கார்த்திக்.

ஒரு ஓவரில் ஓட்டமெதுவும் கொடுக்காது 2 விக்கெற்றுக்களை வீழ்ததியது முக்கிய அம்சமாகும். இப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். மத்திய ரயில்வேயில் பணிபுரியும் முரளி கார்த்திக், ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் ரயில்வே அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்திய அணியில் இவரது சிறப்பான பணியைப் பாராட்டியே அமைச்சர் அவருக்கு இப்பரிசையும் பதவி உயர்வையும் வழங்கியுள்ளார். (7)

## அட்வான்டா டென்னிஸ் தொடர் மவுரி ஸ்மோ இறுதிக்குத் தகுதி



அமெரிக்காவின் பிலடெல்பியாவில் நடைபெறும் அட்வான்டா டென்னிஸ் தொடரில் பிரான்சின் அமெலி மவுரி ஸ்மோ இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். முன்னணி டென்னிஸ் வீராங்கனைகள் பங்கேறகும் இந்த டென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையா அரையிறுதிப் போட்டி கடந்த சனியன்று நடந்தது. நடப்பு சம்பியனான மவுரிஸ்மோ, விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்த்து விளையாட இருந்தார். ஆனால் போட்டிக்கு முன்னதாக ஷரபோவா காயம் காரணமாக விலகிக்கொண்டதால் மவுரிஸ்மோ இறுதக்குத்தகுதி பெற்றார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் வெராஜுவோனாவா 6-3,7-6 என்ற செற்களில் சக நாட்டு வீராங்கனையான நாதியா பெட்ரோவாவை வென்றார். (7)

## போர்டர்–கவாஸ்கர் சுற்றுத் தொடர் 2010ற்கு முன் இடம்பெற முயற்சி

இந்திய அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிகளுக்கிடையேயான போர்டர் கவாஸ்கர் கோப்பைக்கான அடுத்த இந்தியச் சுற்றுப் பயணத்தை 2010க்கு முன்பாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவுஸ்திரேலிய கிரிக்கெற் சங்கத்தின் தலைவர் பொப் மெரிமான் தெரிவித்தார்.

மும்பையில் கடந்த புதன கிழமை இரவு நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பின்பு நிருபர்களிடம் பேசுகையில் இதை அவர் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெற் சங்கத்தின் ஐ.சி.சி.அடுத்த 10 ஆண்டுகளுககான போட்டி அட்டவணைப்படி அவுஸ்திரேலிய அணி இனி 2010இல் தான் இந்தியாவுக்கு வரும். ஆனால் அது உறுதி செய்யப்பட்ட அட்டவணை அல்ல. அதற்கு முன்பாகவே அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் விளையாடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐ.சி.சியின் அட்டவணையில் இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் இன்னும் கையெழுத்திடவில்லை என்றார் அவர். புதிதாக தொடங்கபபடட்டுள்ள போர்டர்-கவாஸ்கர் மாஸ்டர்ஸ் கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவில் மும்பையைசேர்ந்த டாக்டர் சோனாலி சப்காலேவுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள கிரி·பித் பல்கலைக்கழகத்தில் மேல்படிப்பை படிக்க அவருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் படி சோனாலிக்கு ரூ.12லட்சம் வழங்கப்படவுள்ளது. அலன்போடரும் கவாஸ்கரும் இணைந்து இக் கல்வி உதவித் தொகையை சோனாலி சப்காலேவுக்கு வழங்கினர். (து-7)

# புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்ப்போர்

# மாற்றுத் தீர்வொன்றை முன்வைப்பது அவசியம்

## சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள், அதற்கான மாற்றுத் தீர்வை முன்வைக்கவேண்டுமென கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பிராந்திய மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய ஊடகவியலாளரும், ஆயவாளருமான நாராயணசாமி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதுகுறித்துக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தம்து தனிநாட்டுக் கோரிக்கையை விட்டுக்கொடுத்து சமரசம் செய்யத் தயாராக இருக்கின்றாரா என ஆய்வாளர் நாராயணசாமி அம்மாநாட்டில் கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

இதற்குப் பதலிளிக்கும விதமாக அங்கு கருத்துத் தெரிவித்த வி.ரி. தமிழ்மாறன்,

விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடத் தயாரா? என்று கேள்வி எழுப்புவதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வுகுறித்து அரசாங்கம் ஏதாவது உத்தரவாதத்தை வழங்குமா? என்பதைப் பார்க்கவேண்டும் என்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ்மக்களுக்கு எந்தவொரு உத்தரவாதத்தையும் அரசு வழங்கத் தயாரில்லை என்பதுடன, இப்பிரச்சினைத் தீர்வுகுறித்த ஒத்தநிலைப்பாடு தென்னிலங்கை அரசியல் சக்திகளிடம் இல்லை என்பதையும், கவனத்தில்கொள்ள வேண்டும் என்றும் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்தார்.

அளப்பரிய தியாகங்கள் மூலம் போராடி வந்த விடுதலைப்புலிகள், இன்று ஒரு அரசியல் சக்தியாகவும் பரிமாணம் பெற்று, தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கான ஒரு இடைக்காலத் தீர்வுகுறித்து கையளித்துள்ள வரைபை அரசாங்கம் பரிசீலித்து உரிய பதிலை வழங்குவது முக்கியம் என்றும் அவர் தனதுரையில் மேலும் கூறியுள்ளார்.

கொழும்பு கலதாரி உல்லாச விடுதியில் கடந்த இருதினங்களாக நடைபெற்ற தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிராந்திய மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப பிரச்சினைகள் குறித்து அந்தந்த நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும், ஆய்வாளர்களும் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். (ற)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெறும்

(மருதங்கேணி)

மருதங்கேணி கல்விக்கோட்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் மற்றும் மீட்டல் கருத்தரங்குகள் இம்மாதம் 13,14,15ஆம் திகதிகளில், மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும், உடுத்துறை மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.


இக்கருத்தரங்கில் தமிழ் மாணவர் ஒன்றியமும்,கிளிநொச்சி கல்வி வலயமும் இணைந்து மீட்டல் வகுப்புக்களை நடாத்தவுள்ளன.

மீட்டல் வகுப்புகளில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

## வாக்களிப்பில் அடையாளஅட்டை நடைமுறை

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு விசேட நடைமுறைகள் வேண்டும்

## ரவூப் ஹக்கீம் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 14ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளது. ஆனால் இதுவரை அவர்களுக்கான அடிப்படைவசதிகள் உள்ளிட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

யாழ்.முஸ்லிம் வாலிபர் முன்னணி கொழும்பு குணசிங்கபுரம் பிரதீபா மண்டபத்தில் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவ இதனைத் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேறி பல இடங்களில் வாழ்கின்ற முஸ்லிம் அகதிகளுடைய வாக்குரிமைகள் கடந்த 14 வருடங்களாக இழக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இந்நிலையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அடையாள அட்டைகள் வாக்களிப்போருக்கு அத்தியாவசியமான விடயம் எனக் கூறுகின்றது.

இதனால் அடையாள அட்டைகள் பெறுகின்ற விடயம் சம்பந்தமாக இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கென்று விசேடநடைமுறை அமுல்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை தேர்தல் ஆணையாருககும், ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கும் கொடுக்கவிருக்கின்றோம்.

இவ்விடயம் சம்பந்தமாக எமது கட்சி புதியதொரு நடவடிக்கைக் குழுவை அமைத்து இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யவிருப்பதாக ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ப-121)

# பொதுக் கிணறுகளை சுத்தம் செய்யக் கோரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 9ஆம் வட்டாரம் வல்லன் கிராம அபிவிருத்தி சங்கத்தால் குளக்கரையினை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்ட இரு நன்னீர்க் கிணறுகளிலிருந்து பெருமளவான மக்கள் பயனடைந்து வந்தனர்.

ஆனால் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப்பின் இக்கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் மக்கள் அதனைப் பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளனர்.

இதனைக் கவனத்தில் கொண்டு அண்மையில் புங்குடுதீவு சமுர்த்தித் திட்டத்தினர் அக்கிணறுகளைப் புனரமைப்புச் செய்தனர்.

ஆனால் அக்கிணறு உரிய முறையில் சுத்தம் செய்யப்படாததால் மக்கள் அதனைப் பயன்படுத்த முடியாதநிலை உள்ளது.

எனவே அதனைச் சுத்தம் செய்து தருமாறு சமுர்த்தி பிரதிநிதிகளிடம் பலதடவை கோரியும் பயனில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இவற்றை சுத்தம் செய்து மக்கள் பாவனைக்கு உகந்த, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-126)

## சந்திரிகாவின் ஆட்சியின்போதே

# முஸ்லிம் அரசியலை பிளவுபடுத்த பல சதிகள் இடம்பெற்றுள்ளன

## பஸீர் சேகுதாவூத் சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசப்படுத்தி பாராளுமன்றத்தை நிர்ணய சபையாக மாற்றும் நடவடிக்கைகளை கூட்டமைப்பு அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் அரசாங்கம் உத்தேசித்துள்ள தேர்தல் சட்டத் திருத்தம் முஸ்லிம்களுக்கு மிகவும் ஆபத்தானது.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காஙகிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பஸீர் சேகுத்தாவூத் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் அரபா விததயாலய ஆராதனை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லீம்களின் அரசியல் இன்று இக்கட்டானதொரு சூழ்நிலைக்குத தள்ளப்பட்டு நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளுமே முஸ்லிம் காங்கிரசைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வந்தனர்.

இருந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா .குமாரதுங்காவின் ஆட்சிக் காலத்திலேயே மிகப்பெரும் சதிகளையும், சாவால்களையும் முஸ்லிம்கள் சந்தித்துள்ளனர். இது முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், பாரம்பரியங்களையும் பாதித்துள்ளது.

தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக முஸ்லிம்களின் அரசியலைப் பகடக்காய்களாக்கி முஸ்லிம்களை பிளவுடச்செய்யும் நடவடிகைகளை ஜனாதிபதி முமமுரமாக மேறகொண்டு வருகின்றார் என அவர் மேலும தெரிவித்தார். (ப-121)

# தமிழ்ச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அமெரிக்காவில் இடம்பெற்றது!

அமெரிக்க நியூயோர்சி மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழ்ச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு இரண்டு வரலாற்று ஆவணங்களை வெளியிட்டு வைத்துள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆவது அகவை எட்டுகின்ற காலகட்டத்தில், அவருடைய பன்முகத்தன்மையை வெளிக்காட்டுகின்ற காலத்தை வென்ற தேசியத் தலைவரின் நிழல் படத்தொகுப்பும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் புதிய வெளியிடான "போரும் சமாதானமும்" என்ற ஆய்வுநூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டாக்டர் ஜெயலிங்கம் தேசியத் தலைவரின் ஆவணப் படத்தொகுப்பை அறிமுகம் செய்து வெளியிட்டு வைக்க, திரு.மனோரஞ்சன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

இந்நூல் ஜெனீவாவை மையமாகக்கொண்டு இயங்கும் அனைத்துலக தமிழர் ஒன்றியத்தின வெளியீடாகும்.

விடுதலைப்புலிகளின் இராணுவ அரசியல் போராட்ட வரலாற்றை சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படைகளைக் கொண்டு மதிப்புரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய "போரும சமாதானமும்" என்ற நூலை விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார் ஆய்வுரை நிகழ்த்தி வெளியிட்டு வைக்க, அமெரிக்க - இலங்கை தமிழச் சங்கத் தலைவர் சந்திரநாதன் பெற்றுக்கொண்டார்.

இந்நூல் முதற்தடவையாக அமெரிக்காவில வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் வணபிதா கருனாரட்ணம் அடிகளார் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். (ற)

# யாழில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படல் வேண்டும்

யாழப்பாணக் குடாநாட்டில் சிதத ஆயுர்வேத வைத்தியர்கள் அதிகமாகவிருந்து வருகின்ற போதிலும்கூட இங்கு ஒரு முழுமையான ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் இன்னமும் ஆரம்பிக்கப்படாமல் இருந்துவருவது பெரும் குறையாகவுள்ளதாக சிதத ஆயுர்வேத வைத்தியர்கள் தெரிவித்துவருகின்றனர்.

கடந்த காலங்களில் கைதடிப் பகுதியில் ஓர் மூலிகைத் தோட்டத்தினை அமைப்பதற்கு தென்மராட்சி பிரதேச செயலகமும, சர்வதேச தொண்டர் அமைப்பு ஒன்றும் முயற்சி செய்திருந்தபோதிலும்கூட, போதிய நிதி ஒதுக்கீடுகள இல்லாமையினால் திட்டம் இடைநடுவில கைவிடப்பட்டது.

குடாநாட்டில ஆயுர்வேத வைதத்தியத்துறை மிகவும் பிரபல்யம் பெற்று இருந்துவருகின்றபோதிலும்கூட இத்தகைய மூலிகைத் தோட்டத்தினை அமைப்பதற்கு சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் தரப்பில் போதிய ஆர்வங்கள் ஏற்படவில்லை என அறியப்படுகின்றது.

இநநிலையில சிதத ஆயுர்வேத வைததியர்கள் தமது மருததுவத தேவைக்கு வேண்டிய மூலிகைப் பொருட்களுக்கு தென்னிலங்கையையே நம்பியிருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(ப-16)

# மாணவிகளின் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து பலாங்கொடவில் போராட்டம்

(பலாங்கொட)

பலாங்கொட தேசிய பாடசாலை மாணவிகள் இருவர் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுததபபடடதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகப் பக்கச்சார்பின்றி நடவடிக்கை எடுக்கக்கோரியும் பலாங்கொட நகர சந்தியில் பிக்குமார் உட்பட பொதுமக்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலாங்கொட எல்லபொல பனசலையைச் சேர்ந்த கொலன்னாவ சாந்த விஜயதேரர் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய சாந்த விஜயதேரர் இப்போராட்டம் இனரீதியான போராட்டமல்ல. மாணவியரை நாசம் செய்த நாசக்காரர்களுக்கு எதிரான போராட்டமாகும். இவ்விடயத்தில் பொலிஸார் நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நடந்து 3 தினங்களாகியுள்ள நிலையில் சம்பவத்தில் தொடர்புடைய ஏனைய நபர்களை கைதுசெய்ய பலாங்கொட பொலிஸாரால் முடியவில்லை. இச்சம்பவத்தில் முக்கிய சந்தேகநபரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் புதல்வரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும் என்றார். (ற)

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர்

(நேற்றைய தொடர்ச்சி)

207) யா/க/5795 திருமதி. தங்கம்மா கந்தவனம்.
208) யா/க/5804 திரு. தம்பு சரவணமுத்து.
209) யா/க/5829 திரு. வினாசி கார்த்திகேசு.
210) யா/க/5872 திரு. சீனி கந்தப்பு.
211) யா/க/5896 திருமதி. அன்னம்மா வல்லிபுரம்.
212) யா/க/5926 திருமதி. நாகமுத்து தாமோதரம்பிள்ளை.
213) யா/க/5963 திருமதி. வேதாத்தை செல்லத்துரை.
214) யா/க/6011 திருமதி. புனிதவதி வல்லிபுரம்.
215) யா/க/6020 திருமதி. சரஸ்வதி சின்னையா.
216) யா/க/6021 திரு. செல்வநாயகம் நவரட்ணம்.
217) யா/க/6025 திரு. சின்னையா சிவகுரு.
218) யா/க/6034 திருமதி. நல்லம்மா துரைத்தம்பி.
219) யா/க/6073 திருமதி. சிவபாக்கியம் இராசா.
220) யா/க/6087 திருமதி. யோகம்மா மகாலிங்கம்.
221) யா/க/6117 திரு. சின்னத்தம்பி சண்முகம்.
222) யா/க/6132 திரு. இளையதம்பி மயில்வாகனம்.
223) யா/க/6157 செல்வி. இரத்தினமணி கந்தையா.
224) யா/க/6171 திரு. முருகன் மாணிக்கம்.
225) யா/க/6203 திருமதி. சின்னம்மா கதிரேச.
226) யா/க/6204 திருமதி. சின்னம்மா சூரிப்பிள்ளை.
227) யா/க/6205 திரு. வல்லி துரையன்.
228) யா/க/6216 திருமதி. சரஸ்வதி சந்திரசேகரம்.
229) யா/க/6277 திருமதி. செசிலியா சாமிநாதன்.
230) யா/க/6282 திரு. சீமான்பிள்ளை அந்தோனிப்பிள்ளை.
231) யா/க/6344 திரு. இளையதம்பி சின்னத்தம்பி.
232) யா/க/6360 திருமதி. வள்ளியம்மை கிட்டிணபிள்ளை.
233) யா/க/6382 திரு. சின்னையா கிருஸ்ணபிள்ளை.
234) யா/க/6417 திரு. இளையதம்பி சதாசிவம்.
235) யா/க/6433 திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம்.
236) யா/க/6439 திருமதி. இளையதங்கம் சின்னத்துரை.
237) யா/க/6467 திரு. செல்லையா அருளானந்தம்.
238) யா/க/6490 திருமதி. சின்னப்பிள்ளை சித்தர்.
239) யா/க/6516 திருமதி. பொன்னாச்சி காசிப்பிள்ளை.
240) யா/க/6532 திரு. இளையதம்பி சின்னையா.
241) யா/க/6582 திருமதி. செல்லமுத்து தம்பையா.
242) யா/க/6614 திரு. வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை.
243) யா/க/6630 திருமதி. சூரியவதனா கோபாலவடிவேல்.
244) யா/க/6676 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்.
245) யா/க/6683 திரு. சின்னத்தம்பி வல்லிபுரம்.
246) யா/க/6757 திருமதி. இரத்தினம் முருகேசு.
247) யா/க/6772 திருமதி. தங்கச்சிப்பிள்ளை கந்தசாமி.
248) யா/க/6788 திரு. சுப்பிரமணியம் அருணாசலம்.
249) யா/க/6790 திரு. வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை.
250) யா/க/6824 திருமதி. சிவபாக்கியம் கந்தப்பு.
251) யா/க/6834 திருமதி. தெய்வானை கணபதிப்பிள்ளை.
252) யா/க/6843 திருமதி. தங்கம்மா கணேசபிள்ளை.
253) யா/க/6879 திருமதி. மாம்பழம் சூரர்.
254) யா/க/6881 திருமதி. சேது சின்னையா.
255) யா/க/6901 திரு. கதிர்காமு நடராசா.
256) யா/க/6903 திரு. சரவணை சின்னத்துரை.
257) யா/க/6929 திரு. சின்னையா இளையதம்பி.
258) யா/க/6935 திரு. கதிர்காமத்தம்பி பாலசுப்பிரமணியம்.
259) யா/க/6947 திரு. முத்தன் குமாரன்.
260) யா/க/6949 திருமதி. மாணிக்கம் கணபதிப்பிள்ளை.
261) யா/க/6951 திருமதி. இளையதங்கம் தருமலிங்கம்.
262) யா/க/7000 திருமதி. சின்னப்பிள்ளை கந்தன்.
263) யா/க/7027 திரு. சீனியர் சின்னத்தம்பி.
264) யா/க/7039 திரு. முருகன் சின்னவன்.
265) யா/க/7046 திருமதி. இளையபிள்ளை கதிரவேலு.
266) யா/க/7063 திரு. முருகுப்பிள்ளை வேலுப்பிள்ளை.
267) யா/க/7079 திரு. வெள்ளையர் கணபதிப்பிள்ளை.
268) யா/க/7091 திரு. தம்பு அருணாசலம்.
269) யா/க/7112 திருமதி. ஞானப்பிரகாசம் சேனாதிராசா.
270) யா/க/7123 திருமதி. மனோன்மணி குமாரசாமி.
271) யா/க/7157 கிரு. கந்கையா கிருநாவக்கரசு.
272) யா/க/7244 திருமதி. வள்ளிப்பிள்ளை செல்லையா.
273) யா/க/7264 திரு. கார்த்திகேசு கணபதிப்பிள்ளை.
274) யா/க/7271 திரு. கிட்டிணர் வல்லிபுரம்.
275) யா/க/7281 திரு. பொன்னையா நாகலிங்கம்.
276) யா/க/7286 திரு. சின்னததம்பி சுப்பிரமணியம்.
277) யா/க/7295 திரு. சின்னத்தம்பி நடராசா.
278) யா/க/7326 திரு. வல்லிபுரம் கந்தசாமி.
279) யா/க/7341 திரு. செல்லர் சந்தரசேகரம்.
280) யா/க/7345 திரு. சுப்பிரமணியம விஜயகுமார்.
281) யா/க/7401 திருமதி. தங்கமுத்து கந்தசாமி.
282) யா/க/7446 திருமதி. மகேஸ்வரி இராஜரத்தினம்.
283) யா/க/7450 திருமதி. மாணிக்கம் சிதம்பரப்பிள்ளை.
284) யா/க/7502 திருமதி. சின்னி கார்த்தி.
285) யா/க/7534 திருமதி. பசுபதி தம்பன்.
286) யா/க/7568 திருமதி. இயவேற்ப்பிள்ளைபிலிப்பு.
287) யா/க/7622 திருமதி. சரஸ்வதி சுந்தரம்.
288) யா/க/7625 திருமதி. பாறி கதிரன்.
289) யா/க/7772 திருமதி. வாலாம்பிகையம்மா சபாரத்தினக்குருக்கள்.
290) யா/க/7802 திருமதி. இலட்சுமிப்பிள்ளை சிவகுரு.
291) யா/க/7870 திருமதி. செல்லமுத்து பொன்னையா.
292) யா/க/7877 திருமதி. சரஸ்வதிப்பிள்ளை இலகுப்பிள்ளை.
293) யா/க/7886 திரு. சிட்டன் தர்மன்.
294) யா/க/7891 திரு. கதிரவேற்பிள்ளை இராசநாயகம்.
295) யா/க/7894 திரு. செல்லப்பா இளையதம்பி.
296) யா/க/7936 திரு. சின்னத்தம்பி கந்தையா.
297) யா/க/7939 திரு. கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை.
298) யா/க/7941 திரு. வல்லிபுரம் பொன்னையா.
299) யா/க/7942 திருமதி. பொற்கொடி சின்னத்தம்பி.
300) யா/க/7961 திரு. வீரகத்தி குலசிங்கம்.
301) யா/க/7962 திரு. தம்பு சின்னத்தம்பி.
302) யா/க/8074 திருமதி. சின்னத்துரை நாகரத்தினம்.
303) யா/க/8099 திருமதி. நாச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை.
304) யா/க/8109 திருமதி. சிவகாமி ஆறுமுகம்.
305) யா/க/8138 திருமதி. அன்னக்கண்டு கிருஸ்ணபிள்ளை.
306) யா/க/8160 திருமதி. கோகிலாம்பாள் சுப்பிரமணியக்குருக்கள்.
307) யா/க/8175 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்.
308) யா/க/8188 திரு. சின்னட்டி கந்தக்குட்டி.
309) யா/க/8190 திரு. தோரையன் சீனியன்.
310) யா/க/8230 திரு. கந்தவனம் கிருஸ்ணபிள்ளை.
311) யா/க/8233 திரு. ஆழ்வையினார் சுப்பிரமணியம்.

## பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

01) யா/பரு/27 திரு. கிட்டிணர் வேலுப்பிள்ளை.
02) யா/பரு/113 திருமதி. இரத்தினம் கதிரவேலு.
03) யா/பரு/131 திருமதி. கமலநாயகி தாமோதரம்பிள்ளை.
04) யா/பரு/141 திரு. வடிவேலு பொன்னுத்துரை.
05) யா/பரு/187 திருமதி. கெங்கநாயகி உமாபதிராசா.
06) யா/பரு/306 திரு. சோமசுந்தரம் நாராயணசாமி.
07) யா/பரு/329 திரு. சின்னத்துரை கந்தையா.
08) யா/பரு/355 திரு. செல்லத்துரை கருணானந்தசாமி.
09) யா/பரு/414 திரு. சிவப்பிரகாசம் பசுபதி.
10) யா/பரு/429 திருமதி. தெய்வநாயகி ஆறுமாமுகப்பெருமாள்.
11) யா/பரு/431 திரு. சச்சிதானந்தம் இரட்ணசிகாமணி.
12) யா/பரு/519 திரு. கணபதிப்பிள்ளை இராசையா.
13) யா/பரு/657 திருமதி. நாகம்மா சின்னராசா.
14) யா/பரு/667 திரு. ஆழ்வாப்பிள்ளை சிவக்கொழுந்து முருகுப்பிள்ளை.
15) யா/பரு/692 திருமதி. சாந்தாவதி லோகேஸ்வரா.
16) யா/பரு/702 திரு. கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை.
17) யா/பரு/706 திரு. கந்தவனம் கணபதிப்பிள்ளை.
18) யா/பரு/718 திரு. கந்தன் முத்தையா.
19) யா/பரு/744 திரு. ஜேசுரத்தினம் கங்கவனம்பொன்னக்கனா.
20) யா/பரு/894 திரு. செல்லையா பாலசிங்கம்.
21) யா/பரு/914 திரு. வீரகத்தியார் சுப்பிரமணியம் நடராசா.
22) யா/பரு/938 திருமதி. சிவயோகம் பொன்னைய
23) யா/பரு/952 திரு. கனகரத்தினம் குமாரசுவாமி.
24) யா/பரு/1033 திரு. அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை.
25) யா/பரு/1038 திரு. சின்னத்துரை தங்கவேலு.
26) யா/பரு/1047 திரு. சூசை பாவிலு.
27) யா/பரு/1049 திரு. கதிர்காமு பாலசுந்தரம்.
28) யா/பரு/1077 திருமதி. அன்னலட்சுமி துரைச்சாமி.
29) யா/பரு/1102 திரு. பொன்னையா மாணிக்கவாசகர்.
30) யா/பரு/1109 திரு. சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம்.
31) யா/பரு/1144 திரு. செல்லமுத்து மகாலிங்கம்.
32) யா/பரு/1165 திருமதி. கமலாம்பிகை கனகசபை.
33) யா/பரு/1175 திரு. சுப்பையா வடிவேலு.
34) யா/பரு/1218 திரு. பொன்னையா பஞ்சநாதன்.
35) யா/பரு/1243 திரு. கணபதி சபாபதி.
36) யா/பரு/1246 திரு. ஆறுமுகம் செல்வராசா.
37) யா/பரு/1256 திருமதி. செபமாலையம்மா எமிலியாம்பிள்ளை.
38) யா/பரு/1262 திரு. சின்னப்பொடி செல்லையா.
39) யா/பரு/1277 திரு. ஆறுமுகம் நடராசா.
40) யா/பரு/1296 திரு. நடராசா இராசரத்தினம்.
41) யா/பரு/1297 திரு. சின்னையா பாலசிங்கம்.
42) யா/பரு/1300 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை.
43) யா/பரு/1334 திரு. கந்தப்பர் வேல்முருகு முத்துக்குமாரசாமி.
44) யா/பரு/1344 திரு. செல்லப்பா மாணிக்கம்.
45) யா/பரு/1371 திரு. அருணாசலம் தியாகராசா.
46) யா/பரு/1384 திரு. கந்தைப்பர் சுப்பிரமணியம்.
47) யா/பரு/1385 திரு. வீரகத்தி செல்லையா.
48) யா/பரு/1395 திரு. ஆழ்வாப்பிள்ளை ஏரம்பு.
49) யா/பரு/1456 வைத்தியக் கலாநிதி. பரமநாதன் சிறீபத்மநாதன்.
50) யா/பரு/1463 திரு. வீரகத்திப்பிள்ளை முருகேசு.
51) யா/பரு/1473 திரு. கார்த்திகேசு குணவர்த்தனம்.
52) யா/பரு/1492 திரு. கணபதிப்பிள்ளை தங்கத்துரை.
53) யா/பரு/1503 திரு. கந்தப்பர் சின்னையா.
54) யா/பரு/1548 திருமதி. தெய்வானை மாப்பாணர்.
55) யா/பரு/1612 திருமதி. ரஞ்சினி முருகையா.
56) யா/பரு/1658 திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை.
57) யா/பரு/1739 திரு. பரஞ்சோதி அருள்ராஜா.
58) யா/பரு/1750 திரு. வைரவப்பிள்ளை மாப்பாணர்.
59) யா/பரு/1784 திருமதி. அல்லியம்மா நல்லதம்பி.
60) யா/பரு/1822 திரு. ஐயாமுத்து குமாரசாமி.
61) யா/பரு/1829 திரு. கண்டன் தம்பிராசா.
62) யா/பரு/1835 திரு. கதிரித்தம்பி அரியரத்தினஐயர்.
63) யா/பரு/1848 திருமதி. சின்னக்கண்டு சின்னத்தம்பி.
64) யா/பரு/1869 திரு. நவரத்தினம் பாலசுப்பிரமணியம்.
65) யா/பரு/1949 திரு. சின்னராசா துரைசாமி.
66) யா/பரு/1954 திருமதி. தங்கம்மா குழந்தைவேலு.
67) யா/பரு/1990 திரு. சுப்பையாக்குருக்கள் வேதாரணியக்குருக்கள்.
68) யா/பரு/2005 திரு. தம்பிமுத்து சின்னையா.
69) யா/பரு/2041 திருமதி. லெட்சுமியம்மா குமாரசுவாமி.
70) யா/பரு/2055 திரு. கந்தசாமி முருகுப்பிள்ளை.
71) யா/பரு/2067 திருமதி. பாய்க்கியம் சபாரத்தினம்.
72) யா/பரு/2070 திரு. செல்லாவினாயகம் நவரெத்தினம்.
73) யா/பரு/2071 திரு. இளையபெருமாள் அமரசேனாதிபதி.
74) யா/பரு/2080 திரு. சிதம்பரப்பிள்ளை நடராசா.
75) யா/பரு/2102 திரு. வேலுப்பிள்ளை சதாசிவம்.
76) யா/பரு/2105 திரு. ஆறுமுகம் இராசையா.
77) யா/பரு/2115 திரு. முருகேசு தம்பிமுத்து.
78) யா/பரு/2193 திரு. சீனியர் கந்தசாமி.
79) யா/பரு/2209 செல்வி. பார்வதியம்மை செல்லையாபிள்ளை.
80) யா/பரு/2260 திரு. சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம்.
81) யா/பரு/2266 திரு. கணபதிப்பிள்ளை சிவசுந்தரம்.
82) யா/பரு/2291 திரு. சபாபதிப்பிள்ளை செல்லத்துரை.
83) யா/பரு/2307 திரு. சுப்பிரமணியம் தியாகராசா.
84) யா/பரு/2357 திரு. கந்தையா வல்லிபுரம்.

# பெயர் விபரம் – கார்த்திகை 2004

| | | |
|---|---|---|
| 85) | யா/பரு/2420 | திருமதி. செல்வநாயகி செல்வநாயகம். |
| 86) | யா/பரு/2447 | திரு. கனசபை கதிரவேற்பிள்ளை. |
| 87) | யா/பரு/2458 | திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு. |
| 88) | யா/பரு/2476 | திரு. கதிர்காமர் கிருஷ்ணபிள்ளை. |
| 89) | யா/பரு/2501 | திரு. குமாரசாமி பாலசுப்பிரமணியம். |
| 90) | யா/பரு/2511 | திரு. வேலுப்பிள்ளை சிவகுரு. |
| 91) | யா/பரு/2514 | திரு. சபாபதிப்பிள்ளை விசுவநாதன். |
| 92) | யா/பரு/2522 | திரு. கனகசபை முருகேசு. |
| 93) | யா/பரு/2542 | திரு. மாணிக்கம் வல்லிபுரம். |
| 94) | யா/பரு/2559 | திருமதி. அன்னபாக்கியம் விக்னேஸ்வரன். |
| 95) | யா/பரு/2597 | திரு. வைரமுத்து ஆண்டியப்பர். |
| 96) | யா/பரு/2620 | திருமதி. சின்னாச்சிப்பிள்ளை சுப்பிரமணியம். |
| 97) | யா/பரு/2625 | திருமதி. இராசமணி சுப்பிரமணியம். |
| 98) | யா/பரு/2638 | திரு. பொன்னையா சிங்காரம். |
| 99) | யா/பரு/2643 | திரு. தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை. |
| 100) | யா/பரு/2649 | திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை. |
| 101) | யா/பரு/2653 | திரு. தாமு வேலுப்பிள்ளை. |
| 102) | யா/பரு/2677 | திரு. வைத்திலிங்கம் ஆனந்தலிங்கம். |
| 103) | யா/பரு/2700 | திரு. சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம். |
| 104) | யா/பரு/2725 | திரு. வல்லிபுரம் கந்தசாமி. |
| 105) | யா/பரு/2726 | திருமதி. புஸ்பமாலா செல்வ்ராசா. |
| 106) | யா/பரு/2736 | திரு. வேலன் கோபாலு. |
| 107) | யா/பரு/2747 | திரு. மாணிக்கம் இராமநாதன். |
| 108) | யா/பரு/2752 | திரு. சின்னத்தம்பி தியாகராசா. |
| 109) | யா/பரு/2758 | திரு. ஆறுமுகம் ஞானமூர்த்தி. |
| 110) | யா/பரு/2790 | திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதம். |
| 111) | யா/பரு/2820 | திருமதி. கனகம்மா தருமலிங்கம். |
| 112) | யா/பரு/2836 | திரு. சேதப்பா பாசேந்திரன். |
| 113) | யா/பரு/2846 | திரு. கணபதிப்பிள்ளை நடராசா. |
| 114) | யா/பரு/2889 | திரு. கணபதிப்பிள்ளை பொன்னையா. |
| 115) | யா/பரு/2900 | திருமதி. நாகமுத்து கந்தையா. |
| 116) | யா/பரு/2954 | திரு. சங்கரப்பிள்ளை பரஞ்சோதி. |
| 117) | யா/பரு/2974 | திரு. கார்த்திகேசு அமரசிங்கம். |
| 118) | யா/பரு/2989 | திரு. சபாபதிப்பிள்ளை சிவப்பிரகாசம். |
| 119) | யா/பரு/2992 | திரு. இரத்தினசபாபதிக்குருக்கள் பொன்னம்பலக்குருக்கள். |
| 120) | யா/பரு/3000 | திரு. குழந்தைவேலு கந்தசாமி. |
| 121) | யா/பரு/3015 | திரு. இரத்தினசபாபதி விஜயலிங்கம். |
| 122) | யா/பரு/3026 | திரு. பொன்னையா கிருஷ்ணபிள்ளை. |
| 123) | யா/பரு/3055 | திரு. குமாரசாமி சதாசிவம். |
| 124) | யா/பரு/3114 | திருமதி. பரிபூரணம் தம்பிராசா. |
| 125) | யா/பரு/3132 | திரு. சவரி செபமாலை. |
| 126) | யா/பரு/3145 | திரு. தொம்மைப்பிள்ளை மரியாம்பிள்ளை. |
| 127) | யா/பரு/3232 | திருமதி. அழகம்மா கந்தையா. |
| 128) | யா/பரு/3250 | திரு. சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை. |
| 129) | யா/பரு/3252 | திரு. முத்தையா சாம்பசிவம். |
| 130) | யா/பரு/3268 | திரு. காத்தமுத்து தெய்வநாயகம். |
| 131) | யா/பரு/3271 | திருமதி. சௌந்தரராணி அருந்தவராசா. |
| 132) | யா/பரு/3273 | திருமதி. நாகமுத்து நாகேந்திரம். |
| 133) | யா/பரு/3284 | திரு. ஆழ்வார் முருகேசு. |
| 134) | யா/பரு/3294 | திருமதி. அழகம்மா றிச்சேட்ஸ். |
| 135) | யா/பரு/3297 | திருமதி. பாக்கியலட்சுமி சிவஞானசுந்தரம். |
| 136) | யா/பரு/3307 | திரு. வையித்திலிங்கம் பரமலிங்கம். |
| 137) | யா/பரு/3365 | திரு. பொன்னையாஐயர் ஸ்ரீபதிசர்மா. |
| 138) | யா/பரு/3383 | திருமதி. திருப்பதி சண்முகநாதன். |
| 139) | யா/பரு/3385 | திரு. வீரகத்திப்பிள்ளை நடராசா. |
| 140) | யா/பரு/3394 | திரு. இராமஸ்சுவாமி சதானந்தன், |
| 141) | யா/பரு/3399 | திருமதி. இராசம்மா கெங்காதரம். |
| 142) | யா/பரு/3405 | திரு. சரவணமுத்து குமாரசாமி. |
| 143) | யா/பரு/3412 | திருமதி. பாக்கியம் நடராசா. |
| 144) | யா/பரு/3433 | திரு. வேலுப்பிள்ளை பொன்னையா. |
| 145) | யா/பரு/3535 | திருமதி. பூரணம் இராசரத்தினம். |
| 146) | யா/பரு/3537 | திருமதி. பாப்பம்மா தம்பிமுத்து. |
| 147) | யா/பரு/3547 | திரு. ஏகாம்பரம் இராசசுந்தரம். |
| 148) | யா/பரு/3552 | திருமதி. பொன்னாச்சி சபாபதிப்பிள்ளை. |
| 149) | யா/பரு/3554 | திரு. சின்னவன் வடிவேலு. |
| 150) | யா/பரு/3570 | திருமதி. நித்தியலஷ்மி சந்திரசேகரம். |
| 151) | யா/பரு/3581 | திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை. |
| 152) | யா/பரு/3604 | திரு. செல்லத்துரை மாணிக்கவர்சகர். |
| 153) | யா/பரு/3611 | திரு. கணபதிப்பிள்ளை விநாயகம். |
| 154) | யா/பரு/3612 | திரு. னேதிராஜசேகரம் கணேசராசா. |
| 155) | யா/பரு/3639 | திரு. வேலுப்பிள்ளை ஈசுரபாதம். |
| 156) | யா/பரு/3656 | திரு. வல்லி கணபதிப்பிள்ளை. |
| 157) | யா/பரு/3670 | திரு. கணபதிப்பிள்ளை சுப்ரமணியம். |
| 158) | யா/பரு/3689 | திரு. பெரியான் சரவணை. |
| 159) | யா/பரு/3695 | திரு. பெரியான் சரவணை. |
| 160) | யா/பரு/3702 | திருமதி. சிவபாக்கியம் இரத்தினசிங்கம். |
| 161) | யா/பரு/3725 | திரு. செல்லப்பா சுப்பிரமணியம். |
| 162) | யா/பரு/3732 | திரு. கணபதி மாணிக்கம். |
| 163) | யா/பரு/3743 | திரு. சின்னவன் செல்லையா. |
| 164) | யா/பரு/3750 | திரு. செல்லத்தம்பி கணேசராசா. |
| 165) | யா/பரு/3758 | திரு. ஆறுமுகம் விஜயசுந்தரம். |
| 166) | யா/பரு/3821 | திரு. செல்வவினாயகம் தணிகாசலம். |
| 167) | யா/பரு/3853 | திரு. கணபதிப்பிள்ளை பொன்னையா. |
| 168) | யா/பரு/3897 | திரு. கதிர்காமு சுப்பிரமணியம். |
| 169) | யா/பரு/3906 | திருமதி. தெய்வானை ஆறுமுகசாமி. |
| 170) | யா/பரு/3945 | திரு. தெய்வப்பிள்ளை மாணிக்கம். |
| 171) | யா/பரு/4032 | திரு. பரமுப்பிள்ளை கந்தவனம். |
| 172) | யா/பரு/4038 | திரு. நல்லதம்பி செல்லையா. |
| 173) | யா/பரு/4080 | திருமதி. திலகவதி சுந்தரகுமாரன். |
| 174) | யா/பரு/4095 | திரு. செல்வவடிவேல் கணேசமூர்த்தி. |
| 175) | யா/பரு/4118 | திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை. |
| 176) | யா/பரு/4128 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி. |
| 177) | யா/பரு/4168 | திரு. முத்தையா துரைரத்தினம். |
| 178) | யா/பரு/4203 | திரு. முத்தையா பாலசிங்கம். |
| 179) | யா/பரு/4228 | திரு. கார்த்திகேசு சோமநாதர். |
| 180) | யா/பரு/4233 | திரு. சின்னையா தங்கராசா. |
| 181) | யா/பரு/4244 | திரு. சின்னையா கிட்டிணபிள்ளை. |
| 182) | யா/பரு/4300 | திருமதி. தங்கமுத்து சந்திரசேகரம். |
| 183) | யா/பரு/4303 | திரு. ஆழ்வாப்பிள்ளை பிள்ளைநாயகம். |
| 184) | யா/பரு/4339 | திரு. முருகப்பர் தியாகராசா. |
| 185) | யா/பரு/4348 | திரு. ஆழ்வான் சின்னையா. |
| 186) | யா/பரு/4388 | திரு. ஆழ்வாப்பிள்ளை பழனிவேலு. |
| 187) | யா/பரு/4396 | திரு. கனகரத்தினம் கந்தப்பா. |
| 188) | யா/பரு/4420 | திரு. நடராசா இராசரத்தினம். |
| 189) | யா/பரு/4449 | திரு. வைத்திலிங்கம்பிள்ளை ஆறுமுகம்பிள்ளை. |
| 190) | யா/பரு/4466 | திரு. நாகப்பர் கணபதிப்பிள்ளை. |
| 191) | யா/பரு/4468 | திரு. இராமசாமி சிவகுரு. |
| 192) | யா/பரு/4510 | திருமதி. அல்லிக்கண்டு பரராஜசிங்கம். |
| 193) | யா/பரு/4521 | திருமதி. தங்கரெத்தினம் மாணிக்கவாசகம். |
| 194) | யா/பரு/4523 | திரு. குழந்தையன் சுந்தரம். |
| 195) | யா/பரு/4549 | திருமதி. தவமணிதேவி ரவீந்திரராஜா. |
| 196) | யா/பரு/4553 | திரு. வேலுப்பிள்ளை பொடியப்பிள்ளை. |
| 197) | யா/பரு/4578 | திருமதி. பாக்கியம் செல்லையா. |
| 198) | யா/பரு/4683 | திரு. கிருஷ்ணபிள்ளை இராமலிங்கம். |
| 199) | யா/பரு/4686 | திரு. பரமு இராமலிங்கம். |
| 200) | யா/பரு/4720 | திரு. ஆறுமுகம் பொன்னையா. |
| 201) | யா/பரு/4778 | திருமதி. அன்னலெட்சுமி குமாரசாமி. |
| 202) | யா/பரு/4805 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம். |
| 203) | யா/பரு/4912 | திரு. தாமோதரம் அரியநாயகம். |
| 204) | யா/பரு/4936 | திரு. பொன்னம்பலம் திருநாவுக்கரசு. |
| 205) | யா/பரு/4940 | திருமதி. காந்தியம்மா பாலசிங்கம். |
| 206) | யா/பரு/4947 | திரு. துரைசாமி வேலுப்பிள்ளை. |
| 207) | யா/பரு/4963 | திருமதி. தங்காள் நவரத்தினம். |
| 208) | யா/பரு/4965 | திரு. வேலுப்பிள்ளை கந்தையா தாமோதரம்பிள்ளை. |
| 209) | யா/பரு/4974 | திரு. தம்பையா சிவப்பிரகாசம். |
| 210) | யா/பரு/5008 | திருமதி. இராசநவமணி முருகேசு. |
| 211) | யா/பரு/5031 | திரு. வேலுப்பிள்ளை கிட்டிணபிள்ளை. |
| 212) | யா/பரு/5102 | திரு. கணபதிப்பிள்ளை மாணிக்கம். |
| 213) | யா/பரு/5132 | திருமதி. பொன்னம்மா சிவப்பிரகாசம். |
| 214) | யா/பரு/5161 | திரு. இளையதம்பி வேலுப்பிள்ளை. |
| 215) | யா/பரு/5172 | திரு. வயிரமுத்து இராசரத்தினம். |
| 216) | யா/பரு/5187 | திரு. வைரவன் வேலன். |
| 217) | யா/பரு/5218 | திரு. பொன்னுச்சாமி மார்க்கண்டு. |
| 218) | யா/பரு/5253 | திருமதி. கிருஷ்ணசாமி பார்பதிப்பிள்ளை. |
| 219) | யா/பரு/5322 | திருமதி. சுசீலாதேவி தேவராசா. |
| 220) | யா/பரு/5355 | திரு. வேலுப்பிள்ளை பாக்கியநாதன். |
| 221) | யா/பரு/5357 | திரு. கந்தையா பொன்னையா. |
| 222) | யா/பரு/5360 | திருமதி. இராசம்மா முத்துச்சாமி. |
| 223) | யா/பரு/5367 | திருமதி. இரத்தினம் பாலகிருஷ்ணன். |
| 224) | யா/பரு/5482 | திரு. சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு. |
| 225) | யா/பரு/5492 | திரு. தியாகராசா சதாசிவம். |
| 226) | யா/பரு/5507 | திருமதி. கனகம்மா சின்னத்தம்பி. |
| 227) | யா/பரு/5513 | திரு. சின்னத்தம்பி இராசா. |
| 228) | யா/பரு/5558 | திருமதி. சிவசகுந்தரம்மா பரஞ்சோதிப்பிள்ளை. |
| 229) | யா/பரு/5584 | திரு. சேதுபதி பொன்னம்பலம். |
| 230) | யா/பரு/5670 | திருமதி. முத்தம்மா செல்வராசா. |
| 231) | யா/பரு/5689 | திரு. சின்னத்தம்பி சிந்தாமணி. |
| 232) | யா/பரு/5718 | திருமதி. திருமயிலநாயகியம்மா கிட்டினசாமி. |
| 233) | யா/பரு/5736 | திரு. பொன்னையா இராசதுரை. |
| 234) | யா/பரு/5772 | திரு. வேலுப்பிள்ளை மாணிக்கம். |
| 235) | யா/பரு/5774 | திருமதி. றோசம்மா துரைச்சாமி. |
| 236) | யா/பரு/5783 | திரு. சின்னத்தம்பி தெய்வேந்திரராசா. |
| 237) | யா/பரு/5823 | திரு. வினாயகமூர்த்தி ஏரம்பமூர்த்தி. |
| 238) | யா/பரு/5829 | திருமதி. சுந்தரவல்லி ஆறுமுகசாமி. |
| 239) | யா/பரு/5894 | திரு. முத்துக்குமாரு வடிவேலு. |
| 240) | யா/பரு/5899 | திரு. கணபதி சின்னத்துரை. |
| 241) | யா/பரு/5947 | திருமதி. மாணிக்கம் சிற்றம்பலம். |
| 242) | யா/பரு/5967 | திருமதி. நல்லம்மா சிவபாலசுந்தரம். |
| 243) | யா/பரு/6073 | திரு. கந்தையா வேலுப்பிள்ளை. |
| 244) | யா/பரு/6135 | திரு. தில்லைச்சிற்றம்பலம் சுப்பிரமணியம். |
| 245) | யா/பரு/6183 | திரு. அம்பலவாணர் கந்தசாமி. |
| 246) | யா/பரு/6210 | திருமதி. செல்லம்மா சிவசாமி. |
| 247) | யா/பரு/6267 | திரு. முருகேசு பொன்னம்பலம். |
| 248) | யா/பரு/6297 | திரு. குழந்தைவேலு கதிர்காமத்தம்பி. |
| 249) | யா/பரு/6309 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை. |
| 250) | யா/பரு/6359 | திரு. ஐயாத்துரைக்குருக்கள் வேதக்குட்டிக்குருக்கள். |
| 251) | யா/பரு/6363 | திருமதி. பாக்கியம் சின்னப்பு. |
| 252) | யா/பரு/6397 | திரு. கணபதி சிவலிங்கம். |
| 253) | யா/பரு/6404 | திரு. செல்லர் நவரட்ணம் அல்பிறட். |
| 254) | யா/பரு/6408 | திரு. வீரகத்தியார் சுப்பிரமணியம். |
| 255) | யா/பரு/6428 | திருமதி. யோகநாயகி தங்கவடிவேல். |
| 256) | யா/பரு/6477 | திரு. முத்துச்சாமி சிதம்பரநாதக்குருக்கள். |
| 257) | யா/பரு/6509 | திரு. துரைச்சாமி நவரத்தினம். |
| 258) | யா/பரு/6510 | திருமதி. இரத்தினம் கந்தசாமி. |
| 259) | யா/பரு/6612 | திரு. சண்முகம் மாணிக்கம். |
| 260) | யா/பரு/6640 | திரு. கந்தசாமி தாமோதரம்பிள்ளை. |
| 261) | யா/பரு/6642 | திரு. கிட்ணசாமி குழந்தைவேலு. |
| 262) | யா/பரு/6694 | திரு. வயிரமுத்து நவரத்தினம். |
| 263) | யா/பரு/6702 | திரு. அருணாசலம் பாலசிங்கம். |
| 264) | யா/பரு/6703 | திருமதி. மேரியம்மா வேதநாயகம். |
| 265) | யா/பரு/6706 | திரு. சின்னத்தம்பி கந்தையா. |
| 266) | யா/பரு/6707 | திருமதி. இராசம்மா சின்னத்தம்பி. |
| 267) | யா/பரு/6743 | திரு. பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம்பிள்ளை. |
| 268) | யா/பரு/6744 | திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம். |
| 269) | யா/பரு/6781 | திரு. சுப்பிரமணியம் கோபாலசாமி. |
| 270) | யா/பரு/6794 | திரு. ஞானமுத்து திருச்செல்வம். |
| 271) | யா/பரு/6806 | திருமதி. கனகம்மா சிவசம்பு. |
| 272) | யா/பரு/6808 | திருமதி. பொன்னுக்கண்டு சின்னத்தம்பி. |
| 273) | யா/பரு/6852 | திரு. வினாசித்தம்பி தங்கராசா. |
| 274) | யா/பரு/6865 | திரு. இலட்சுமணப்பெருமாள் பாலசூரியமூர்த்தி. |

(தொடரும்)

# ஐயங்கள் ஆயிரம்

## பார்வை இல்லாதவர்கள் கனவு காணமுடியுமா?

பார்வையற்றவர்கள் கனவு காணுவார்களா? என நாம் சிந்திப்பதுண்டு. நிச்சயமாகப் பார்வையற்றவர்கள் கனவு காணமுடியும். விழித்திருக்கும்போது அவர்களுக்கு என்ன தெரிகிறதோ அதனடிப்படையில் கனவில் தெரியும்.

அதாவது அவர்கள் உலகம், ஒலி மற்றும் வாசனை, தொடு உணர்வு ஆகியவற்றால் உருவாவது. அதனடிப் படையில் அவர்களது மனத்திரையில் நினைவுகள் எழும். அதுபோலவே கனவிலும் சப்த, கந்த, ஸ்பரிச உருவங் கள தோன்றும் ஏன் நிறங்கள் கூட இருக்கலாம். வடிவம் கூடத் தொடுவதால் பெற்ற உணர்வுமூலம் எழும்பலாம் சிலையை நாம் கண்ணால் ஒரு நொடியில் பார்த்துவடு கிறோம். பார்வையற்றவர்கள் தலை முதல் பாதம் வரை தொட்டுப்பார்த்து அறிந்துகொள்வார்கள்.

எப்படி நினைவில் அறிகிறார்களோ அதுபோலவே கனவிலும் அறிவார்கள். வழக்கம்போல அவர்களது கன வும துண்டு துண்டாக, தாறுமாறாக இருக்கும்.

ரயில் என்றால் உங்கள் மனதில் அதன் உருவம் தெரியும். பார்வை தெரியாதவர்களுக்கு அதன் தடதட ஒலயும புயல போன்ற வேகமும், பெரியதொரு பொருள் என்ப தாகவும் தெரியும்.

# சோம்பலை உதற முடியும்!

காலையில் எழுந்தது முதல் சுறுசுறுப்பாக விழிப்புடன் ஒருவர் பணிபுரிய வேண்டுமென்றால், அவர் உடலில் இரும்புச்சத்து போதுமானளவில் இருக்கவேண்டும். இரும்புச் சத்துக் குறையும்போது உடல் பலவீனமடையும். இரும்புச் சத்துதான் ஒக்சிசனைச் சுமந்துசென்று எல்லா உறுப்புக ளுக்கும் விநியோகித்து உடலுக்குச் சக்தியைத் தருகிறது.

முக்கியமாக, மூளையில் டோப்பாமைன் என்ற இரசா யனப் பொருள் சுரந்தால் மனதும், உடலும் விழிப்புணர்வு டன் செயற்படுகின்றன. இதற்கும் இரும்புச்சத்துதான் தேவை. மாதவிலக்கின்போது பெண்கள் உடலில் இரும்புச்சத்துக் குறைவதால் மிகவும் களைப்புடன் இருப்பார்கள்.

உடற்பயிற்சியின்போது இந்தச் சத்து உடலில் குறை கிறது. 5 உலர்ந்த திராட்சைப்பழம், ஒரேஞ்சுச்சாறு, ஒரு வாழைப்பழம் முதலியவற்றைத் தினமும் சாப்பிட்டால் போதும். இதன்மூலம் உடலில் இரும்புச்சத்து எளிதாகக் கரகிக்கப்படும் உடலும் மனமும் மிகவும் சுறுசுறுப்பாக நாள் முழுவதும் இருக்கும்.




S.அனுஷா
வயது:- 18
ஈஸ்வரி பவனம்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொலைக்காட்சி.

நா.செந்தூரன்
வயது:- 15
56 ஆனந்தன் வடலி
3ஆம் ஒழுங்கை,
அரியாலை.
பத்திரிகை, புத்தகம் வாசித் தல், அரட்டை.

வலம்புரி - சங்குநாதம் பேனாநண்பர் பகுதியில் தமது பெயர்களை பிரசுரிக்க விரும்பு வோர் தம்மைப் பற்றிய முழு விபரங்களுடன் அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து அனுபபுமாறு கேட் டுக்கொள்கிறோம்.

# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல - 35

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தென்னிந்திய நட்சத் திரங்களின் வரிசையில் நவரச நாயகனாக விளங்கும் இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங் கள் விடைகளை எழுதி எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 35**
**'வலம்புரி - சங்குநாதம'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**



குறிப்பு:-
சரியான விடை எழுதுப வர்களில் மூன்று போட்டியாளர் களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங் கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலி கள் தமக்கான பரிசுப்பணத் தினை 'வலம்புரி' காரியாலயத் தில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 35**

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................
அனுப்புபவரின் முகவரி :-........................
........................
........................

## இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 33
## சரியான விடை

சந்தனக் கடத்தல் வீரப்பன்

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 33இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | இ.சுபாசினி<br>கோண்டாவில் மேற்கு,<br>கோண்டாவில். |
| இரணடாம் பரிசு | :- | து.நக்கீரன்<br>முதலாம் ஒழுங்கை,<br>மல்லாகம். |
| மூன்றாம் பரிசு | :- | மை.தமிழழகன்<br>10/7, தண்ணீர் தாங்கி வீதி,<br>குருநகர்,<br>யாழ்ப்பாணம். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

K.செல்வராசா, வண்ணார்பண்ணை. மு.அன்ரனி நிகன், யாழ்பபாணம. T.S.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. ந.நிறோஜா, புங்குடுதீவு. கே.அரசேஸ்வரன், நல்லூர். A.லோகாந்தினி, உரும்பிராய். K.இராஜகோபால், தொல் புரம். சி.தவராசா, பண்டத்தரிப்பு. யோ.ஜெகதீஸ்வரி, சாவ கச்சேரி. க.கபிலன், நீர்வேலி. செ.சுதர்சன், நயினாதீவு. யே.ஜெனிஸ்ரா, பருத்தித்துறை. து.றாஜீத், வதிரி. மை.மதியழகன், குருநகர். தி.சாரங்கன், சாவகச்சேரி. ஜெ.துவாரகா, சங்கானை. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. வீ.இளங்கோ, கோப்பாய். மெ.அறிவழகன், புன்னாலைக்கட்டுவன். க.தவசீலன், நல்லூர். க.யாழின, கொக்குவில். இ.கவிதாரணி, வவுனியா. வே.குமரசுவாமி, கர வெட்டி. S.தர்ஷினி, கொக்குவில். அ.மாதொருபாகன், வல்வெட்டித்துறை. தி.நடராசா, யாழ்பபாணம். க.ஆனந், கொழும்புத்துறை. லோ.அபிராமி, வல்வெட்டி. சி.சித்தார்த் தன், தரிப்பூர். ஆ.அனுஷா, சித்தன்கேணி. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. செ.பிரவீன், கைதடி.

# மேகங்கள்



சில நேரங்களில் வெண் ணிறமாகவும் சிலநேரங்களில் பனிப்படலமாகவும் பல வேளை களில் பஞசுப்படலமாகவும் இன் னும் சிலசமயங்களில் வர்ண ஓவி யமாகவும் மின்னும முகில் எபபடி உருவாகியிருக்கிறது.

கோடி பல கோடி மிகவும் நுண்ணிய நீர்த்துளிகள் அல்லது ஐஸ் துளிகளினாலேயே. இவ்வாறு முகில்கள் உருவாகத் தேவை யான தண்ணீரை நாம் வாழும் இந்தப் ப,மியிலிருந்துதான் பெற் றுக்கொள்கின்றன.

பகல்பொழுதுகளில் ப,மி யின்மீது விழும கடும் சூரிய கதிர் களின் உஷ்ணத்தால் ப,மியிலி ருந்து கடல், ஆறு, குளம், நீர் நிலைகளிலிருந்து மடடுமல்ல மனி தர்களின. மிருகங்களின உடலி லுளள நீர்கூட ஆவியாகி வளி மணடத்தில் கலந்துவிடுகின்றன. இந்த நீர் ஆவியாதல் வளிமண் டலத்தல் காணப்படும் உஷ்ணம் காரணமாகப் படிப்படியாக ஆகா யத்தை மேலநோக்கிப் பயணம் செய்யும்.

மேலே செல்லச் செல்ல வெப்பம் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். இந்தக் குளிர்ச்சி யான தன்மை காரணமாக அந்த நீர் மீணடும் மெல்லிய துளியாகவோ, ஐஸ் தூளாகவோ மாறுகின்றன.

நாம் காணும் சில முகில்கள் ப,ரணமாக உருவாகியிருப்பது நீர்த் துளிகளினால் மட்டுமே. அலலது ஐஸ்தூள்களினால் மட்டுமே. இன னும் சில மேகஙகள இநத இர ண்டினாலுமே கலந்தும் அமைந் திருக்கும்.

மேகங்களிலுள்ள நீர்த்துளி கள் அல்லது ஐஸ் தூள்கள் மிக மிக நுணணியவை. அதனால்தான முகில்கள காற்றுக்கு அகப்பட்டு அங்குமிங்கும் ஓடுகிறது.

இவ்வாறு பறக்கும் மேகங்கள் ஒன்றுடன ஒன்று சேரும்போது அதி லுள்ள நீர்த்துளிகளினளவு பாரத் தால் அதிகரிக்கிறது. அந்தச் சந் தர்ப்பத்தில்தான் தண்ணீர் துளி கள் மழையாக மாறி மீண்டும் பூமி யின் மீது பெய்கிறது.

வாளைப்போன்று வெளிப்படையாகவே நிற்கும் பகைவர்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் நண்பர்கள் போன்று நடித்துக்கொண்டு தூரோகச் செயல் செய்ய வாய்ப்பை எதிர்நோக்கி நிற்கும் பகைவர்களைக் கண்டு அஞ்சுக.

-திருவள்ளுவர்

## நீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

**அத்தியாயம்-3**
**தொடர் -VII**

**மு. திருச்செல்வம்**

கொக்கிளாய் தொடக்கம் கிழக்குக் கரையோரமாகத் தெற்கே வெருகல் ஆறு வரையுள்ள திருகோணமலை ஆட்சி மாவட்டம்.

வெருகல் ஆற்றில் இருந்து கரையோரமாகத் தெற்கே கும்புக்கன் ஆறு வரையுள்ள மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம்.

கும்புக்கன் ஆற்றில் இருந்து தெற்கேயும் மேற்கேயும் ஆக உள்ள் உரோகணமும் பெந்தோட்டை ஆறுவரை பரந்ததுமான காலி ஆட்சி மாவட்டம்.

இந்த ஆறு ஆட்சி மாவட்டங்களின் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆட்சித்தலைவர் இருந்தனர். இந்த ஆறு ஆட்சித்தலைவர்களும், கொழும்பில் உள்ள ஒல்லாந்த ஆளுநரினால் இணைத்து ஆளப்பட்டனர். சாவகத்தில் ஜகர்த்தாவில் ஒல்லாந்தரின் கிழக்கிந்தியக் கம்பனியின் தலைமை நிலையம் இருந்தது. அவர்கள் அங்கிருந்து ஆளுநரை நியமித்துக் கொழும்புக்கு அனுப்பினார்கள்.

நீதியை நெறிப்படுத்துவதற்காக மூன்று நீதிப்பிரிவுகளை ஒல்லாந்தார் ஏற்படுத்தினர்.

கொழும்பு ஆட்சி மாவட்டம், புத்தளம் ஆட்சி மாவட்டம் இரண்டும் ஒரே நீதிப்பிரிவாக இணைக்கப்பட்டன. பெந்தோட்டை ஆற்றில் இருந்து மோதரகம் ஆறுவரையுள்ள கரையோர நிலப் பகுதியில் உள்ள மக்கள் இந்த நீதிப்பிரிவுக்குள் அடங்கினர். கொழும்பு இதன் தலைமை நிலையம்.

யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம், திருகோணமலை ஆட்சி மாவட்டம், மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம் ஆகிய மூன்றும் ஒரே நீதிப்பிரிவாக இணைக்கப்பட்டன. மோதரகம் ஆற்றில் இருந்து கும்புக்கன் ஆறு வரையுள்ள வடக்குக் கிழக்குப் பகுதியே இந்த நீதிப் பிரிவு, யாழ்ப்பாணம் இதன் தலைமை நிலையம்.

காலி ஆட்சி மாவட்டம் தனியான நீதிப்பிரிவு கும்புக்கன் ஆற்றில் இருந்து பெந்தோட்டை ஆறு வரையுள்ள பகுதியே இந்த நீதிப்பிரிவு, காலி இதன் தலைமை நிலையம்.

இலங்கைத் தீவில் இன வழி நாடுகள் இரண்டு இருந்தமையை ஒல்லாந்தர் ஏற்றுக்கொண்டனர். சிங்கள நாட்டினம் இருந்தது. தமிழ் நாட்டினம் இருந்தது. மொழி வழியில் மட்டுமல்ல மதம், வாழ்வுமுறை ,பண்பாடு, கலாசாரம் , நீதி அரசு, ஆட்சிமுறை முதலிய எல்லா வழிகளிலும் இந்த நாட்டினங்கள் வேறுபட்டிருந்தன. இரு நாட்டினங்களும் தனித்தனி நிலப் பகுதிகளைக் கொண்டிருந்தன.

சிங்களவர் கண்டி அரசனின் ஆள்புலத்தில் வாழ்ந்தனர். ஒல்லாந்தரின் ஆள் புலத்தின் தெற்குப் பகுதியிலும் சிங்களவர் வாழ்ந்தனர். சிங்களவர்களுட் பெரும்பான்மையினர் பௌத்தர்.

தமிழர்கள் தீவின் வடமேற்கு, வடக்கு , கிழக்கு நிலப்பகுதியில் வாழ்த்தனர். இவர்களுட் பெரும்பான்மையினர் சைவர்கள்.

எனவே ஒல்லாந்தர் சிங்களவர்களுக்கு எனத் தனியான நீதிப்பிரிவுகளையும் தமிழர்க்கெனத் தனியான நீதிப்பிரிவையும் அமைத்தனர்.

ஆட்சி மாவட்டங்களிற் கூட யாழ்ப்பாணம்- திருகோணமலை- மட்டக்களப்பு ஆட்சி மாவட்டங்கள் ஒரே மாதிரியாகத் தமிழரின் ஆட்சி முறைக்கேற்ப ஆட்சி செய்யப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்தில் (1638-1795) இலங்கைத் தீவில் தமிழரின் வாழ்விடங்கள் தனியாக அமைந்திருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் ஈழ நிலப்பகுதிகள் புத்தளத்தின் வடக்கேயிருந்த கும்புக்கன் ஆறு வரை பரந்திருந்ததும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பிரிட்டிஷாரின் தமிழ் ஈழம்

1795 இல் பிரிட்டிஷ் படைகள் ஒல்லாந்தரிடமிருந்து திருகோணமலையைக் கைப்பற்றின. படிப்படியாக ஏனைய இடங்களைக் கைப்பற்றின். 1815 இல் கண்டியரசு கைப்பற்றப்பட்டது. இலங்கைத் தீவு முழுவதும் பிரிட்டிஷாரின் ஆட்சிக்குள் அமைந்தது.

இலங்கைத் தீவு முழுவதையும் அடிமைப்படுத்தி ஆட்சி செய்த முதல் மேலை நாட்டு அரசு பிரிட்டிஷ் அரசே. போர்த்துக்கேயர் கீழ்நாட்டுச் சிங்கள அரசையும் தமிழீழ அரசையும் கைப்பற்றினர். ஒல்லாந்தர் தீவின் கரையோரப் பகுதி முழுவதையும் ஆட்சிக்குட்படுத்தினர். 1815இல் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்படும் வரை கண்டிச் சிங்கள அரசு இறைமையும் ஆட்சியுரிமையும் ஆள்புலமும் உடைய தனி அரசாக விளங்கியது.

பிரிட்டிஷார் ஆட்சி தொடங்கிய காலங்களில் எழுதப்பட்ட குறிப்புக்கள் தமிழ் ஈழ நிலப்பரப்புத் தனியான நிலப்பரப்பு எனக் கூறுகின்றன. கிளெக்கோர்ண் என்பார் இலங்கையின் பிரிட்டிஷ் ஆளுநர் நோர்த் அவர்களின் செயலாளர். அவர் 1799 ஜூன் முதலாம் நாள் பின்வரும் குறிப்பை எழுதினார்.

“இலங்கைத் தீவானது இரு வேறு நாட்டினங்களால் வெவ்வேறு பகுதிகளாக உடைமை கொணடாடப்பட்டது. ஆட்சி செய்யப்பட்டது. இத்தீவின் நடுப்பகுதியும் தெற்குப் பகுதியும் வளவை ஆற்றில் இருந்து சிலாபம் வரையுமுள்ள மேற்குப் பகுதியும் சிங்களவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபாரிகளால் (தமிழர்களால்) ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இவ்விரு நாட்டினங்களும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டிருந்தன”

ஆளப்படும் மக்களின் மரபுரிமைகளையும் வழமைகளையும் மதித்து வாழ்ந்த ஒல்லாந்த ஆட்சியாளர் தமிழ் ஈழ நிலப் பகுதியைத தனியாகவும் சிங்கள நலப்பகுதியைத் தனயாகவும் பிரித்து நீதி வழங்கினர். ஆட்சி செலுத்தினர்.

பிரிட்டிஷார் அவ்வாறு எண்ணவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிமுறையே உலகின் தலை சிறந்த ஆட்சி முறை என எண்ணினார்கள். தம்மால் ஆளப்படும் மக்களிடம் தமது ஆட்சி முறைமைகளைத் திணித் தார்கள். ஆடம்சிமித் போன்ற அரசியல் சிந்தனையாளர்களின் கருத்துக்கமைய ஆட்சி முறை அமைய வேண்டும் என விரும்பினார்கள். ஒல்லாந்தருக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே இந்த அடிப்படை வேறுபாடு இருந்தது.

பிரிட்டிஷாரின் இத்தகைய சிந்தனைகளால் தமிழ் ஈழ மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். இலங்கையில் பிரிட்டிஷாரின் அரசியல் நெறியை, ஆட்சி முறையை அமுல் நடத்தும் வழி வகைகளை ஆராய்க என 1829 ஆம் ஆண்டில் கோல்புறூக் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. நான்காம் ஜோர்ஜ் மன்னர் இந்த ஆணைக்குழுவை நியமித்தார்.

இந்த ஆணைக்குழு 1832ஆம் ஆண்டில் தனது அறிக்கையை நான்காம் வில்லியம் மன்னரிடம் வழங்கியது. அந்த அறிக்கையில் உள்ள முக்கிய கருத்துக்கள் வருமாறு,

நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு விதமான ஆட்சியைத் தொடர்வதில் பயனில்லை. நாட்டில் உள்ள பல்வேறு இனமக்களிடையே உள்ள வேறுபாடுகள் குறைக்கப்பட வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிமுறை வழிகள் கையாளப்பட வேண்டும். *(தொடரும்)*

# செய்தித் துளிகள்

### கலந்துரையாடல்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனு சரணையுடன் திண்மக்கழிவுகளை சரியான முறையில் அகற்றுவதன் முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலே ஆரம்பமாகவுள்ளது.

இதில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர், அத்துடன் சம்பந்தபட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களையும் உரிய புள்ளிவிபர ஆவணங்களுடன் மேற்படி கலந்துரையாடலிற்கு சமுகமளிக்க வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் பணிப்பாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் பிரதேச செயலகங்களிற்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உயர் அதிகாரிகளையும் பிரதேச செயலக சுற்றாடல் துறை அதிகாரிகளும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றி பொதுவான திண்மக்கழிவு அகற்றும் ஓர் செயற்திட்டத்தை தயாரிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்வதே இக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-252)

### விண்ணப்பங்கள் கோரல்

(சாவகச்சேரி)

கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், கல்லூரிகள், ஆசிரிய கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள், ஆசிரிய மத்திய நிலையங்கள் என்பனவற்றில் நிலவும் கல்வி சாரா ஆளணி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காவல்காரன்,சமையலாளர், தொழிலாளர் ஆகிய பதவிகளுக்கு எட்டாம் தரம் சித்தி எய்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இரசாயனகூட சேவகர்கள் மற்றும் நூலக சேவகர்கள் ஆகிய.பதவிகளுக்கு க.பொ.த.சாதாரண தரத்தில் ஆறுபாடங்கள் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-127)

★ ★ ★

(சாவகச்சேரி)

நீதி மற்றும் நிதித்துறை மறுசீரமைப்பு அமைச்சில் வெற்றிடமாகவுள்ள “மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர்’ பதவிக்கு தற்போது அரசாங்க சேவையில் மற்றும் உள்ளூராட்சி சேவையில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சிங்களம், தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியுடையவராக இருப்பதோடு மேற்படி மொழிகளில் ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றினை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன், க.பொ.த. சாதாரண தரத்தில் ஏனைய இரு மொழிகளில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செயயப்படும் விண்ணப்பதாரிகள் நீதி அமைச்சில் மொழிபெயர்ப்புக்கிளையின் தலைவராக செயலாற்றுவதோடு மொழி பெயர்ப்புக்கிளையின் மொழிபெயர்ப்பு வேலைகளில் ஈடுபடுவார்.

மேலாக சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல் பற்றி மாவட்ட நீதிபதிகளுக்கு சிபார்சுகளை சமர்ப்பித்தல் போன்ற பணிகளிலும் இவர் ஈடுபடுத்தப்படுவார். (ப-127)

### மின்விநியோகம் தடை

(காரைநகர்)

சிறுப்பிட்டி தெற்கு கிராமத்திற்கான மின் வழங்கல் கடந்த நான்கு நாட்களாகத் தடைப்பட் டுள்ளது.

இது குறித்து மின்சார சபைக்கு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் முறையிட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-246)

### வவுனியாவில் செயலமர்வு

கழிவுப்பொருள் முகாமைத்துவம் சம்பந்தமான செயலமர்வு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் செயலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ப-47)

### அணைக்கட்டு

(புங்குடுதீவு)

வேலணை உதவி அரசாங்க அதிபரின் நிதியுதவியுடன் புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் உவர்நீர் தடுப்பு அணைக்கட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிதியிலிருந்து புங்குடுதீவு வடக்கு தொடக்கம் பல்லதீவு வரைக்குமான அணைக்கட்டு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ப-126)

### பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தலைவர் வி.கனகலிங்கம் தலைமையில் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ப-126)

### தேசியத் தலைவரின் பிறந்ததின ஏற்பாடு

(திருநெல்வேலி)

தமிழீழத் தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்த நாளை ஒட்டி வடமராட்சியில் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தன்று பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயிலில் விசேட பூசை வழிபாடுகள்இடம் பெறவுள்ளன.

அத்துடன், இவ் ஆலயத்தில் அமைந்துள்ள மடத்தில் தேசியத் தலைவரின் பிறந்த நாளை ஒட்டி அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ற-43)

### மாவீரர் தின ஏற்பாடு

(சாவகச்சேரி)

எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை தென்மராட்சிப் பகுதியில் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு தேசிய எழுச்சிப் பேரவையினரும், பொது அமைப்புக்கள், தென்மராட்சி அரசியல் துறையினரும் இணைந்து ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இதற்கமைவாக பொதுமக்களால் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைப்பு செய்யப்படுகிறது. (ப-29)

### பாதீனியம் அகற்றப்பட்டது

புங்குடுதீவைச் சேர்ந்த போதனாசிரியர்,சமுர்த்தி முகாமையாளர்கள் தலைமையில் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புங்குடுதீவு நடுத்துருத்தீவில் காணப்பட்ட பாதீனியம பிடுங்கியும் எரியூட்டியும் அண்மையில் அழிக்கப்பட்டது. (க-126)

# மூல நோயும் மலச்சிக்கலும்

தமக்கு உணவு உயிர்வாழ எவ்வளவு அவசியமாகிறதோ அதேபோல உடல் ஆரோக்கியத்தைப் பேண மலம் கழித்தலும் அவசியமாகின்றது. "குடலைக கழுவி உடலை வளர்" என்பது பழமொழி இப் பழமொழியானது, ஒழுங்கான மலம் கழிக்கும் பழக்கம் மனிதனுக்கு உடல் சுகத்தையும் உள்ளச் சுகத்தையும் கொடுத்து நல்ல பசியினை உண்டாக்கி, அதன் மூலம் உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றது எனும் கருத்தை உள்ளடக்கியுள்ளது. இதற்கேற்ப ஓர் மனிதனுக்கு மலச்சிககல ஏற்படுத்தும் இடத்து உடலில் மலம் தேங்கி அதனால் வயிற்றில் உபாதையை ஏற படுத்துகின்றது. இது அவனுக்குக் கோபம், எரிச்சல், சோம்பல், தூக்கம்கெடல், தலைவலி போன்றவற்றை ஏற்படுத்தி மன நலம் கெட வழிவகுக்கின்றது. எனவே மலச்சிக்கல் அற்ற வாழ்க்கைக்கு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை அறிதல் அவசியமாகின்றது. மலச்சிக்கலைப் பற்றி ஆராயுமிடத்து, மூல நோயைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் இவ்விரு பிரச்சினைகளும் நம்முள் பலருக்கு இணைந்தே காணப்படுகின்றது. அநேகமானோருக்கு ஏற்படும் மூல நோயானது, மலச்சிக்கலின் ஓர் வெளிப்பாடேயாம். பலர் மூல நோய் பற்றிய தகுந்த விளக்கமின்மையால் தவறான சிகிச்சை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றிக் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இதனைத் தவிர்த்துக் கொள்ள நாம் இங்கு மூல நோய் பற்றியும் மலச்சிக்கல் பற்றியும் ஆராய்ந்து அதற்குரிய சிகிச்சை முறைகளையும் அறிந்து கொள்வோம்.

மூல நோய் / பவுந்திரம் / haenorrhoids piles குதம் (anus) எனப்படும் நேர்குடலின் முடிவுப் பகுதியிலுள்ள நாளங்களில் ஏற்படும் புடைபபையே (Varicosity of veins) மூலநோய் என்கிறார்கள். வழக்கில் இது Piles என்று அழைக்கப்படுகிறது. லத்தீன் மொழியில் Piles என்பது பந்து எனும் பொருள் கொண்டது.

Haemorrhoids எனும்வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து உருவாகிய தாகும். இங்கு haem - blood இரத்தத்தைக் குறிக்கும் ஓர்சொல். Rhoos-Flowing பெருக்கு என்பதைக்குறிக்கும். அதாவது இரத்தப் பெருக்கி

## மருத்துவ விளக்கம்

னைக் குறிக்கும் இவ்விரு பெயர்களும் அந் நோய்க்குரிய இலச்சணங்களைத தெளிவுற சுட்டிக் காட்டி நற்கின்றன. மூல நோயானது தனிப்படவோ அல்லது வேறு சில நோய்களின் ஒரு அறிகுறியாகவோ ஏற்படலாம். பலருக்கு ஏற்படும் மூல நோயானது முதலாவது வகையைச் சேர்ந்ததாகும்.

### மூலநோயின் காரணங்கள்

1. நீடித்த மலச்சிக்கல்:-

மூலநோய் ஏற்படுவதற்குரிய மிக முக்கிய காரணம் நீடித்த மலச்சிக்கலாகும்.

2. சிறு நீர் வழித்தடைகள்:-

ஆண்களில் Prostate எனப்படும் சுரப்பி பெரிதாகி சிறுநீர்ப் பாதையை அடைபபதாலோ அல லது சிறுநீர்ப் பாதையில் ஏற்படும்தடைகளாலோ (Rurethral Stricture) சிறுநீர்க் கழிப்பதில் கஷ்டப்படும் இடத்து (Strarnig at Micturitio) மூல நோய் ஏற்படலாம்.

03. வேறுநோயின் அறிகுறியாக:-

உதாரணமாக நேர் குடலில் ஏற்படும் புற்று நோய் அங்குள்ள நாளங்களில் அமுக்கத்தை ஏற்படுத்தி நாளக்குருதி மேல் நோக்கிச் செல்வதைக் குறைக்கின்றது. இதனால் குத நாளங்கள் விரிவடைந்து மூல நோய் ஏற்படுகின்றது.

04. கர்பிணித் தாய்மார்களில் ஏற்படும் மூலநோய் இவர்களில், நேர்குடல் நாளங்கள் கர்ப்பையினால் அழுத்தப்படுவதனாலும் கர்பிணிகளின் அதிகரித்துக் காணப்படும் Progesterone எனும் ஓமோன் இன் நாளச் சுவர்களை தளர்வுறச் செய்வதாலும் நாளப்புடைப்பு ஏற்படுகின்றது.

05. பரம்பரை வழியாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களில் பலருக்கு மூல நோய் காணப்படுவதாவது; இங்கு ஓர் பரம்பரைக் காரணி செயற்படுவதை எடுத்துக்காட்டுகிறது. பிறவியில் ஏற்படும் நாளச் சுவர்களின் வலிமை குறைந்த நிலை (Weakness of walls of veins) இதற்குரிய காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவ வகையானவர்களில் சிலருக்கு மூல நோயுடன் கால்களிலும் நாளபபுடைப்பு (Varicose Veims of leg) காணப்படுகின்றது. மேற்கூறிய காரணிகள் எல்லாவற்றிலும் மலச்சிக்கல் காரணமாக ஏற்படும் மூலநோயே அதிகமாகக் காணப்படுகின்றது.

### மூல நோயின் அமைப்பு

உடலில் நேர் குடல் / மலக் குடல் (Rectum) என்றழைக்கப்படும் பகுதியையும் மலவாசலையும் இணைக்கும் பகுதி குதம் (Anus) என்று அழைக்கப்படுகிறது. இதன் குறுக்கு வெட்டு முகத்தை ஒரு கடிகாரத்தின் முகப்பிற்கு ஒப்பிடுகையில், அதன் 3,7,11 மணிக்குரிய இடங்களில் அநேகமான நாளங்கள் புடைப்புறுகின்றன. இதனை விட மற்றைய இடங்களிலும் சிறு நாளப் புடைப்புகள் அரிதாக ஏற்படும்.

### மூல நோயின் அறிகுறிகள்

இங்கு மூல நோயை மூன்று நிலைகளாக வகுக்கின்றோம்.

1. முதலாவது நிலை மூலம் Haemorrhoids எனும் பெயர் சுட்டிக்காட்டுவது போல இரத்தம மலத்துடன் கலந்து வெளியேறுதல் முதல் அறிகுறியாகும். ஆரம்பத்தில் சிறிதளவு இரத்தம் வெளியேறும் இதுவே அதிகமாகி நாளடைவில் சோகைநோய் (Anaemia) உண்டாகும் அளவிற்குச் செல்கின்றது. இந்நிலை பலரில் காணப்படும் இது சில மாதங்களுக்கோ, வருடங்களுக்கோ தொடரலாம். இந் நிலை முதலாவது நிலை மூலம் என்படுகின்றது.

2. இரண்டாவது நிலை மூலம் அ) இங்கு நாளப்புடைப்புகள் மலம் கழிக்க முற்படுகையில்

**வைத்திய கலாநிதி இந்துமதி**

மட்டும் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இவை மீண்டும் தன் பழைய நிலையை அடைந்து விடும்.

ஆ) நாளடைவில் வெளித் தள்ளப்படும் நாளடைப்புக்கள் தன் போக்கில் உட்செல்லாது கைகளால் உள்ளே தள்ள வேண்டிய நிலையை அடைகின்றது. இவ்விரு நிலைகளையும் சேர்த்து இரண்டாவது நிலை மூலம் என்கிறார்கள். (தொடரும்)

## சிறுவிளம்பரம்

சிறிய குடும்பம் வசிப்பதற்கு (இரண்டு நபர்) ஏற்ற வீடு உடன் தேவை. சகல வசதிகளும் கூடியது. யாழ்.மாநகர சபை எல்லைக்குட் பட்டது.

T.P 077 - 6500040

(8986)

## தீபாவளித் திருநாளில் சமாதானம் மலரப் பிரார்த்திப்போம்

வெள்ளிக்கிழமைகள் தோறும் விசேட சமய வழிபாடும் மக்கள் சேவையும் கோயில்கள் மூலம் செயல்படவழிகாட்டுக. இந்து இளைஞர் பேரவை, திருகோணமலை. (8978)

## கிராம உத்தியோகத்தர் இராணுவத்துடன் சந்திப்பு

(கோண்டாவில்)

இராணுவத்தினருக்கும் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கோண்டாவல் பரஞ்சோதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது வீதி புனரமைப்பு மற்றம் களவு, கசிப்பு போன்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது என்பன தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ச-130)

## கூட்டம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்தி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் சங்கத்தின் பழைய மாணவர்களை இணைப்பதற்கு விண்ணப்பமும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 113 பழைய மாணவர்கள் சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். (ப-108)

## மருதங்கேணி வைத்தியசாலை நாளை திறந்து வைப்பு

(திருநெல்வேலி)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் போது சேதமடைந்த மருதங்கேணி வைத்தியசாலையும், மகப்பேற்று விடுதியும் நெக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இந்த வைத்தியசாலையைப் புனரமைக்க நெக்கொட் நிறுவனம் 236 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கி இருந்தது. தற்போது இவ் வைத்தியசாலைக் கட்டடப்பணிகள் அனைததும் பூர்த்தியாகிய நிலையில், நாளை புதன்கிழமை இவ் வைத்தியசாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிமனையினர், மருதஙகேணி உதவி அரச அதிபர் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் வைத்தியசாலை திறக்கப்படாமையால் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்ள கிளிநொச்சி மற்றும் யாழ்.நகரப் பகுதிகளிற்கு நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலைமை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-43)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் : கார்த்திகை -2004

**தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக் கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைபெறும். 2004 ஆம் ஆண்டு வரை மீளளிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டோரில் இதுவரை மீளப்பெறாதோரும், ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் யோ.தமிழ்குமரன் அறிவித்துள்ளார்.**

01) **வன்னி மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 13.11.2004 (சனி) | | |
| புநகரி நல்லூர் மகாவித்தியாலம் | நல்லூர் - பூநகரி | காலை 8.30 மணி |
| முழங்காவில் மகாவித்தியாலயம் | முழங்காவில் | மு.ப 9.45 மணி |
| விடத்தல்தீவு றோ.க.பாடசாலை | விடத்தல்தீவு | மு.ப 11.30 மணி |
| கறுக்காய்குளம் அ.த.க.பாடசாலை | கறுக்காய்க்குளம் | பி.ப. 12.30 மணி |
| 14.11.2004 (ஞாயிறு) | | |
| மாங்குளம் மகாவித்தியாலயம் | மாங்குளம் | காலை 8.00 மணி |
| ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் | ஒட்டுசுட்டான் | மு.ப.9.30 மணி |
| நெடுங்கேணி மகாவித்தியாலயம் | நெடுங்கேணி | மு.ப.10.30 மணி |
| வித்தியானந்தாக் கல்லூரி | தண்ணீருற்று | ந.ப.12.00 மணி |
| ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | புதுக்குடியிருப்பு | பி.ப.2.30 மணி |
| விசுவமடு மகாவித்தியாலயம் | விசுவமடு | பி.ப. 4.00 மணி |
| 15.11.2004 (திங்கள்) | | |
| வருவாய்ப்பகுதிச்செயலகம் | புளியங்குளம் | காலை 8.30 மணி |
| வருவாய்ப்பகுதிச்செயலகம் | மல்லாவி | மு.ப. 11.30 மணி |
| அக்கராயன் மகாவித்தியாலயம் | அக்கராயன் | பி.ப. 1.30 மணி |
| கிளிநொச்சி மத்தியகல்லூரி | கிளிநொச்சி | பி.ப. 3.30 மணி |

02) **யாழ். மாவட்டம்**

இடம் -: முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம் -: காலை 8.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணிவரை.

| | | |
|---|---|---|
| 17.11.2004 | (புதன்) | நல்லூர், உடுவில். |
| 18.11.2004 | (வியாழன்) | யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பழை. |
| 19.11.2004 | (வெள்ளி) | மானிப்பாய், சங்கானை, காரைநகர், வேலணை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி. |
| 20.11.2004 | (சனி) | கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி. |

## எரிபொருளின் விலை அதிகரிப்பு அரசாங்கத்திற்குப் பெரும் சவால்

### அமைச்சர் அனுரா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உலக சந்தையில் ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பானது, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது என அமைச்சர் அனுரா பண்டார நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இச் சவாலுக்கு எதிர் நீச்சல் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம செய்யவேண்டியுள்ளது.

எனினும், எரிபொருள் விலை அதிகரிப்பை இலங்கை போன்ற வளர்முக நாடுகளினால் கட்டுபபடுத்த முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தளராமல், நாட்டின பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சியெடுக்க வேண்டும்.

கூட்டடைப்பு அரசாங்கம் எதிர் வரும் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் இந்தத்திட்டங்களை தெளிவாகக் காண



முடியும்.

அவ் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து வளர்ச்சிகாணும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ந-121)

## கட்சிக்குள் முரண்பாடா? மறுக்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய முரண்பாடுகளுடைய கட்சி என தேர்தல் செயலகத்தை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்றில் வெளியான செய்திகளை அக்கட்சி மறுத்துள்ளது.

இலங்கையில் அண்மையில் தேர்தலொன்று இடம்பெறுமாயின், ஜாதிக ஹெல உறுமய அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன.

அத்துடன், ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பதவிக்காக இருவருடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இது குறித்த அறிக்கையொன்றை விடுத்துள்ள அக்கடசியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க. இச்செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது என மறுத்துள்ளார்.

அத்துடன், இத்தகைய செய்திகளை நம்பவேண்டாம் என பிரதி தேர்தல் ஆணையாளர் எச்.டபிள்யூ. சிறிவர்த்தன பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (க)

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - குறள்

வலம்புரி

# காலம் உணர்ந்து செயலாற்ற வேண்டும்

வடபகுதியில் பெய்துவரும் மழை காரணமாக தாழ்ந்த பகுதியில் வாழும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துகொள்வதால் இப் பகுதியில் நோய்த் தொற்றுக்கள் பரவும் அபாயமும் மக்கள் இடம்நகர வேண்டிய தேவையும் உள்ளது.

குறிப்பாக யாழ். மாநகரப் பகுதியை அண்மித்த பொம்மைவெளி, சூரியவெளி, காக்கைதீவு ஆகிய பகுதிகளிலும் ஏனைய தாழ்ந்த பகுதிகளிலும் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒழுங்கான வடிகாலமைப்பின்மை, அல்லது வடிகால்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாமை போன்ற காரணங்களினால் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

யுத்தகால சூழ்நிலை இத்தகைய அவல நிலையை தோற்றுவித்தது எனினும் இவற்றை சீரமைப்பதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுக்கொடுப்பதில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தவறிவிட்டார்கள் என்ற கருத்தும் ஏற்புடையதே.

வருமுன்னர் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையில் யாழ்ப்பாணத்து நிர்வாகம் பெரும் பின்னடைவில் உள்ளது என்பதை இங்கு நினைவூட்டுவது குற்றம் குறை காணும் நோக்கில் அல்ல.

மாறாக உரிய திணைக்களங்கள், சபைகள் தமது கடமையைச் செய்யவேண்டுமென்ற வேணவாவிலேயே சுட்டிக்காட்டப்படுகின்றது. வீதி புனரமைப்புச் செய்யும்போது இரண்டாவது தடவையாக தாரூற்றி அந்த வீதியின் காத்திரத்தை உறுதிப்படுத்திக்கொள்வதில் காலதாமதம் காட்டப்படுமாயின், "வீதிப் புனரமைப்பு" என்ற பேச்சில் நீண்டகால நன்மை இருக்கமுடியாது. எனினும் இத்தகைய கால தாமதங்களை பல இடங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோன்ற உடைந்த வடிகால்களுடன் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நடத்தும் போராட்டம், கிணற்று நீரை அள்ளி கிணற்றுக்குள் ஊற்றுவது போன்ற நிலைப்பாட்டை உணர்த்துகிறது. அதாவது உடைந்த வடிகால்களில் இருந்து எடுக்கப்படுகின்ற மண்ணை - கழிவுகளை அந்த வடிகால்களுக்கு அருகிலேயே குவித்து விடுகின்றார்கள்.

மழை பெய்யும் வேளையில் அந்தக் குவியல் மீண்டும் தனது பழைய இடமான வடிகாலுக்குள் சென்று விடுகின்றது. நிலைமை இப்படியானால் மனித ஊழியம் வீண் விரயமாக்கப்படுகின்றதென்பதே யதார்த்தமாகும்.

இத்தகைய ஊழிய விரயம் செலவீனங்களை மட்டும் ஏற்படுத்தும் என்பதில்லை. மாறாக ஊழியத்தின் உச்ச மட்டத் திறனையும் அறவீடு செய்யமுடியாது போகும். இதற்கப்பால் தற்போதைய காலநிலை வடபுலத்தில் சூறாவளியை ஏற்படுத்தலாம் என்ற ஊகங்களும் பரவலாக பேசப்படுகின்றது.

இதில் எந்தளவு உண்மை உண்டு என்பதை விடுத்து, சூறாவளியை எதிர்கொள்ளத்தக்க வகையில் சுற்றுப்புறச் சூழலை தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

இது விடயத்தில் அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள், பொதுமக்கள் என்ற முத்தரப்பினரும் கூட்டாக இணைந்து செயலாற்ற வேண்டும்.

# இரு தசாப்த கால போருக்கு ஓய்வு; படைக்கலங்கள் பழுதடைந்த நிலையில்

(கொழும்பு)

கடந்த காலங்களில் அரசாங்கக் கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கென கொள்வனவு செய்த போர்க்கலங்கள் செயலற்ற நிலையில் இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 160 மில்லியன் ரூபா நிதி செலவில் கொள்வனவு செய்யப்பட்ட "கோபக்கிறாவ" என்ற படைக்கலம் பயன்பாடற்று தற்போது அருகங்காட்சிச்சாலையில் வைக்கப்படும் நிலையில் உள்ளது.

ஏவுகணைச் செலுத்திக் கலங்கள் அதன் இயந்திரங்கள் மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதற்குரிய ஏவுகணைகள் செயலிழக்கும் நிலையில் உள்ளன.

கடல் கீழ் அவதானிப்புச் சாதனம் செயற்பாட்டுத்திறன் அற்றநிலையில் உள்ளது. வான்படையின் பீரங்கி, உலங்கு வானூர்திகள் பறக்கும் நிலையில் இல்லை. இறுதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட துருப்புக்காவி வானூர்திகளில் ஒன்று தரையிலேயே உள்ளது.

மற்றொன்று, பழுதடைந்த பகுதிகளுடன் உள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவை படைக் கலங்களில பழுதடைந்தவற்றில் சிலவே என்றும், இந்த நிலையில் இன்னமும் பல படைக்கலங்கள் உள்ளன என்று இவ் ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-121)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் பியூறு ஹௌவ்டே இவ்வார இறுதியில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான மூன்றுவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் உயர்மட்டக் குழுவின் கடந்த முதலாம் திகதி தாயகம் திரும்பினர்.

மேற்படி குழுவின் தாயகம் திரும்பிய மறுநாள், ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி வன்னி சென்று சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜப்பான் தூதுவரையடுத்து, இலங்கையின் சமாதான முன்னெடுப்பாளராகச் செயற்பட்டு வரும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் எதிர்வரும் வியாழக்கிழமை விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளார்.

இவ்வாறான முக்கியமான நிகழ்வுகளின் வரிசையில், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் இவ்வார இறுதியில் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது யுத்தநிறுத்த உடன்பாட்டின் தற்போதைய எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும், தேக்க நிலையிலுள்ள சமாதான முன்னெடுப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பது உட்பட, வடக்கு-கிழக்கு நிலைமைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது. (ற-121)

# 'இரு விழிப்பார்வை...' கவிதை நூல் வெளியீட்டு விழா

(வவுனியா)

இளம் கலைஞர்கள் நிகழ்கால நிஜங்களை தாங்கள் படைக்கும் ஒவ்வொரு படைப்புக்களிலும் உருவாக்க வேண்டும். அது எமது மக்களினதும் தாயகத்தினதும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற "இரு விழிப்பார்வை ஒரு துளி விஷம்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலைஞர்கள் நிதர்சனமாகப் படைக்கும் படைப்புக்கள் அனைத்தும் எமது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு எடுத்துக் காட்டாக, ஒரு வரலாற்று ஆவணமாக இருத்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்புச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கமைய இந் நடவடிக்கைக்கு மேலதிகப் பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன. பொலிஸாருக்குத் தகவல் வழங்குபவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும்.

அத்துடன், பாதுகாப்புக் கோரியவர்களுக்கு தற்போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனையவர்களுக்கு பொதுப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளில் விசேட பொலிஸ் அதிகாரிகள் 24 மணிநேர சேவையில் ஈடுபட்டுள்ளனர். (ற-121)

# தம்புள்ளவில் விபத்து இருவர் ஸ்தலத்தில் பலி

(தம்புள்ள)

தம்புள்ளவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளார்கள்.

வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை தம்புள்ள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-10)

# காணாமல் போன தபால் பொதிகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தன நிலையத்தில் காணாமல் போன வெளிநாட்டு தபால்பொதிகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தபால்மா அதிபர் கே. எஸ் சேனாதீர இதுபற்றி தகவல் தருகையில், பொலிஸ் விசாரணைக்கு மேலதிகமாக தபால் திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் காணப்படும் அதிகாரிகளிற்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சேனாதீர தெரிவித்திருக்கிறார்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கோட்டை ரயில் நிலையத்திற்கு சமீபமாக உள்ள பற்றைகளுக்குள் சில வெளிநாட்டுத் தபால்கள் இருந்ததை தெரிய வந்துள்ளது. (க-10)

# சமாதானப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்துசமய நிறுவனங்கள் சார்பாக இலங்கை இந்து இளைஞர் பேரவையினால் 1989 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் சமாதானப் பிரார்த்தனை சர்வ சமயிகளாலும் பெரு வரவேற்பைப் பெற்றுள்ளது.

தற்போது விசேடமாக ஜப்சி வெள்ளிக்கிழமைகள் தோறும் இப் பிரார்த்தனைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இதில் சகலரும் கலந்து சிறப்பிக்க வழிபாட்டு விடுமுறையை அரசாங்க அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் சகல சமய நிறுவனங்களும் இணைந்து தொழிற்படுமென்றும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் வே. கெ. தனபாலன் விசேட வேண்டுதலை சகலருக்கும் விடுத்துள்ளார். (க-7)

# விலங்குகள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வளர்க்கப்பட்டு வந்த 8 விலங்குகளை வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களையடுத்து, மாரவெல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலின் போதே இந்த விலங்குகள் மீட்கப்பட்டன.

மாரவெல பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் நடாத்தி வந்த விலங்குப் பண்ணையொன்றிலிருந்து மீட்கப்பட்ட விலங்குகளில், புலியொன்றும் கழுகு ஒன்றும் அடங்குகின்றன.

இவற்றை வளர்த்து வந்தவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது, 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன், இந்த விலங்குகளை விலங்குகளை விலங்குகளை தேசிய சரணாலயத்தில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ற-8)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்

தீமையை நன்மை சமன் செய்கிறது. அலையின் உச்சியில் இருப்பவன், அந்தக் கணத்திற்கு எல்லாம் நன்மையே என்று எண்ணிக் கொள்கிறான். பள்ளத்தில் இருப்பவன் உலகம் தீமை என்கிறான். ஆனால் அனைத்திலிருந்தும் விலகித தனித்து நின்று பார்ப்பவன் எங்கும் தெய்வீக லீலையைக் காண்கிறான்

சுவாமி விவேகானந்தர்

## தீக்காயத்திற்குள்ளான குடும்பப்பெண் மரணம்

தீக் காயங்களுக்குள்ளான நிலையில் கடந்த வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காமையினால் அங்கு மரணமானார்.

நீர்வேலியியைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை பரமேஸ்வரி (வயது 37) என்பவரே மரணமானவராவார்.

மின்சாரம் தடைப்பட்டிருந்தவேளை விளக்கைக் கொளுத்தி அதனுள் மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை ஊற்றியதாலேயே அது எரிந்ததில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ச-5)

## ஜனாதிபதி...

வித்தார்.

அப் பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி நேற்றுக் காலை நாடு திரும்பினார். இவருடன் வெளிவிவகார அமைச்சர் மற்றும் மின்சக்தி அமைச்சர் ஆகியோரும் நாடு திரும்பினர். (ச-121)

## மன்னார்...

மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பெத்தலேவலை, விசேட அதிரடிப் படைப் பிரிவு உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டார்கள். (ச-121)

## பல்கலையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள கலாநிதி இ.வீ.சிங்கன் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் தமிழார்வலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

கலாநிதி இ.வீ.சிங்கன் திருக்குறளில் ஆழ்ந்த புலைமையுடையவர். திருக்குறள் தொடர்பான ஏராளமான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

கலைப்பீடம், தமிழ்த்துறை ஊடாக ஒழுங்குசெய்துள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை கேட்டுள்ளது.(ரு-5)

## தாழமுக்கம்...

வித்தார்.

இம்முறை வடமராட்சிப் பகுதியிலேயே மழை மற்றும் வேகக் காற்றின் தாக்கம் அதிகம் இடம் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


நாதன்ஸ் சினிமா

10.30, 2.30, 6.30 இற்கு

கம்பஸ்

இரவு 8.30 இற்கு

SPIDER MAN 1

மிகவிரைவில்

ட்ரீம்ஸ்

(றில்ஸ்)

யாழ்ப்பாணம் (சி-675)


# வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் ஏ-9 பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி** : 09.11.2004 ஆம் திகதி முதல்
: 15.11.2004 ஆம் திகதிவரை

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 16.11.2004 ஆம் திகதி முதல்
பி.ப. 1.00 மணிவரை

**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி**: 16.11.2004 ஆம் திகதி
பி.ப. 2.30 மணிக்கு

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, "செயலாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.29, செட்டித்தெரு, நல்லூர்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 16.11.2004 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதிசேர் வரி |
|---|---|---|---|---|
| 01 | உரும்பிராய் இந்துக்கல்லூரி வீதி 1ஆம் குறுக்கு வீதி திருத்தவேலை. | 10000.00 | 500.00 | 75.00 |
| 02 | உரும்பிராய் சிவகுல வீதி திருத்த வேலை. | 10000.00 | 500.00 | 75.00 |
| 03 | ஊரெழு கிழக்கு வளர்பிறை சன சமூக நிலைய வீதி திருத்தவேலை. | 12000.00 | 500.00 | 75.00 |
| 04 | கட்டப்பிராய் அம்மன்வீதி திருத்த தொடர்வேலை. | 4000.00 | 500.00 | 75.00 |
| 05 | புத்தூர் பரப்பப்புலம் வீதி திருத்த வேலை. | 25000.00 | 500.00 | 75.00 |
| 06 | இடைக்காடு மாணிக்க இடைக் காடர் வீதி திருத்தவேலை. | 12500.00 | 500.00 | 75.00 |

இது தொடர்பான மேல்திக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**வலி.கிழக்கு பிரதேசசபை,**
**தலைமை அலுவலகம், நீர்வேலி,**
**08.11.2004.**

**இராசரத்தினம் இராசதுரை**
**செயலாளர்**

(C-683)

## கேள்வி அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நியமங்களுக்கு அமைய கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச் செயலகத்தில் ரூபா 750/= மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகள் 2004.11.23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.11.09 ஆம் திகதியிலிருந்து 2004.11.20 ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை "அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட திட்டத்தின் பெயர் குறிப்பிடவேண்டும். காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்பு செய்யப்படக்கூடிய தொகை | மீளளிப்பு செய்யமுடியாத தொகை |
|---|---|---|---|
| தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம் புனரமைப்பு | M6 | 70,000/= | 750/= |
| யாழ்ப்பாண ப.நோ.கூ.சங்க களஞ்சியம் புனரமைப்பும், விரிவாக்கவும் | M8 | 12,000/= | 750/= |

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்

(C-684)

## கேள்வி அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

| வேலையின் விபரம் | மீளளிப்பு செய்யப்படக்கூடிய தொகை | மீளளிப்பு செய்யமுடியாத தொகை |
|---|---|---|
| பாடசாலை தளபாடக் கொள்வனவு | 43,600/= | 750/= |

மேலே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச் செயலகத்தில் ரூபா 750/= மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகள் 2004.11.23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.11.09 ஆம் திகதியிலிருந்து 2004.11.20 ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை "அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் "பாடசாலை தளபாடக் கொள்வனவு" எனக் குறிப்பிடவேண்டும். காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு மாவட்டச் செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்

(C-685)

## மரண அறிவித்தல்

இலங்கை வானொலி புகழ் இசைநடிகமணி கலாபூஷணம்

### V.N.செல்வராசா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சீரணி சண்டிலிப்பாயை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட V.N.செல்வராசா அவர்கள் 07.11.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா, சிவராசா, செல்வநாயகியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா - இராசம்மாவின் அன்பு மருமகனும், உதயகுமார் (சுவிஸ்), யசோதா (ஆசிரியை மானிப்பாய்/ சென்ரான்ஸ், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வகுமார் (சண்டிலிப்பாய்), சுரேஸ்குமார் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகுமாரன், கலாநிதி, புஸ்பானந்தி, சுனிதா, தில்லைராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதீஷா, விதுஷா, ஆதர்சன், கவிப்பிரியன், துளசிகா, கவிந்திகா, மதுஷா, பிரகாசினி, கவிப்பிரவீணா, செஷான், ஜலதரங்கன், இலக்கியன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 10.11.2004 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

துளசிவாசம்
சீரணி,
சண்டிலிப்பாய். (8990)

தகவல்
சி.ஸ்ரீகுமாரன்
(மருமகன்)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2004 இல் அச்சிட்டு வெளிமிடப்பட்டது.